# மக்கள் விசாரணை®

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

மக்களின் மனக்குமுறல்

ஆண்டு-5 இதழ்-10 மார்ச்-2017 மாத இதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter



# கமல்

# தொடங்கும் புதிய கட்சி?



# தானத்தில் சிறந்த தானம் பசுவிற்கு செய்யும் அன்னதானம் மட்டுமே!

# தனக்கென வாழாது நமக்கென வாழும் பசுக்களுக்கு புத்தாண்டு, மாட்டுப் பொங்கல்,

## தங்களின் பிறந்த நாள், திருமண நாள், முன்னோர்களின் நினைவு நாள் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் உணவளித்து மகிழுங்கள்!

கோமாதாவின் பேரருளால் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் அனைத்து செல்வங்களும் கிடைத்திட மனதார பிரார்த்திக்கின்றோம். கடவுளின் படைப்பில் அவனுக்கு நிகரான படைப்பு என்றால், அது பசு மட்டும்தான். நமக்கு எல்லாவிதமான நன்மைகளையும், பயன்களையும் அளிக்கக்கூடிய சக்தி கோமாதாவில் மட்டும்தான் அடங்கி உள்ளது. இப்படி தனக்கென வாழாத பசுக்கள் இரக்கமின்றி கொல்லப்படுவதை தடுக்க காஞ்சி மகாப் பெரியவா ஆசியோடு பசுமடம் என்ற காப்பகத்தை ஏற்படுத்தி கடந்த 18 ஆண்டுகளாக 120 பசுக்களுக்கு மேல் பராமரித்து வருகிறோம். கோயில்கள் மற்றும் மாட்டுச் சந்தைகளில் ஏலம் விடப்படும் வயதான பசுக்களை பெற்றும், கசாப்புக் கடைகளுக்கு செல்லும் பசுக்களை வாங்கியும் பராமரித்து வருகிறோம். இப்பசுக்களைப் பாதுகாக்க புத்தாண்டு, பொங்கல் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் தங்களால் முடிந்த நன்கொடைகளை தீவனம், பராமரிப்பு மற்றும் மருத்துவ செலவிற்கு வழங்கி, இப்புனிதப் பணியான கோ-சேவையில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறோம். தாங்கள் கோமாதாவிற்கு செய்யும் சேவை தங்களின் மாத்ரு, பித்ருக்களுக்கு செய்யும் சேவையாகும். பசுமடத்தை பார்வையிட்ட பின்னும் நீங்கள் உதவி செய்யலாம். பசுக்களை இறுதி காலம் வரை நிம்மதியாகவும், சுகமாகவும் வாழ வைப்பதும், பசுவதையை தடுத்து நிறுத்துவதும், மேலும், பசு வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே எங்களின் முக்கிய நோக்கமாகும். பசுமடத்தில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று 108 பசுக்களுக்கு பாராயணத்துடன் கோபூஜை வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

## பசுமடத்தில் உள்ள வயதான, ஆதரவற்ற, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்க...

ஒரு பசுவை பராமரிக்க ஒரு வாரத்திற்கு ரூ.200 அனுப்புவோருக்கு கோபூஜை செய்த கோமாதா யந்திரம் அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஒரு மாதத்திற்கு ரூ.650 அனுப்புவோருக்கு பித்தளையிலான பெருமாள் விளக்கு அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க இரண்டு மாதத்திற்கு ரூ.1,200 அனுப்புவோருக்கு பித்தளையிலான லெட்சுமி குபேர விளக்கு அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஆறு மாதத்திற்கு ரூ.3,750 அனுப்புவோருக்கு வெள்ளியிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வெல்லம் செலவு ரூ.500 அனுப்புவோருக்கு பித்தளையிலான அஷ்டலெக்ஷ்மி விளக்கு அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் புல் செலவு ரூ.800 அனுப்புவோருக்கு பித்தளையிலான சிவன்-பார்வதி விளக்கு அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வைக்கோல் செலவு ரூ.1,250 அனுப்புவோருக்கு பித்தளையிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம், யந்திரம் அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் தீவனச் செலவு ரூ.2,600 அனுப்புவோருக்கு வெள்ளியிலான கோமாதா விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத மருத்துவச் செலவு ரூ.2,900 அனுப்புவோருக்கு வெள்ளியிலான துளசி மாடம் அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத அகத்தி கீரை செலவு ரூ.4,300 அனுப்புவோருக்கு வெள்ளியிலான தவழும் கண்ணன் அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.6,600 அனுப்புவோருக்கு ஒரிஜினல் வலம்புரி சங்கு அனுப்பி வைக்கப்படும்

## குடும்பம் வாழையடி வாழையாக மகத்தான செல்வச் செழிப்புடனும், மகிழ்ச்சியுடனும் திகழ கோதானம் செய்வீர்!

தாங்கள் விரும்பும் நாட்களில் நாட்டுப் பசுவும் கன்றும் கோதானம் செய்ய ரூ. 12,500/-. கோதானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், செய்வினை தோஷம், பித்ரு தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம், நாகதோஷம் போன்ற 16 வகை தோஷங்கள் முற்றிலும் விலகும். மேலும் தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிடைக்கவும், கணவன்-மனைவி ஒற்றுமை நிலைக்கவும், புத்ர பாக்கியம் உண்டாகவும், தெய்வீக சக்திகள் பாதுகாப்புடன் சுகப்பிரசவம் நடைபெறவும், தடைப்பட்ட திருமணம் கைகூடவும் கோதானம் செய்வீர். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான சிவன் பார்வதி விளக்கும், பித்தளையிலான கோமாதா மற்றும் மதுரா கிருஷ்ணா விக்ரஹமும் அனுப்பி வைக்கப்படும்.



பசுமடத்தில் நடைபெறும் கோதானம்



பசுமடத்தில் நடைபெறும் ரிஷபதானம்

## அனைத்து துன்பங்களும், துயரங்களும் நீங்கி நீண்ட ஆயுள் பெற காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்வீர்!

தாங்கள் விரும்பும் நாட்களில் காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்ய ரூ. 5,000/-. ரிஷபதானம் செய்தால்... அனைத்து தடைகளும் நீங்கி பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகும், வியாபார தடைகள் அகல, வாகன விபத்தை தவிர்க்க, தடை இன்றி தன வரவு மற்றும் காரிய வெற்றி பெற, தோல்விகள் அகல வெற்றிகள் குவிய, ராஜயோகம் அடைய, கற்ற கல்வியும் தேடிய செல்வமும் என்றும் நிலைத்திருக்க காளைகன்று தானம் செய்வீர். ரிஷபதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்.

## மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் நமது கஷ்டங்களை போக்கி இஷ்டங்களை கொடுக்கும் தேவதைகள் குடிகொள்ளும் கோடி தீப ஆராதனை

தங்களது இல்லங்களில் அமைதியும் ஆனந்தமும் நல்வாழ்வும், முன்னோர்கள், குல தெய்வ ஆசி வேண்டியும் மாட்டுத் தொழுவத்தில் கோடி தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்களின் முன்னோர்கள் நினைவாக அல்லது தங்களின் பிரார்த்தனைக்கேற்ப தாங்கள் விரும்பும் தேதியில் பசுமடத்தில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் கோமாதாவிடம் பிரார்த்தனை செய்து தேவதைகள் குடிகொள்ளும் தீபம் தீப ஸ்தம்பத்தின் மீது ஏற்றப்படும். ஒரு நாள் தீபம் ஏற்றி வழிபட ரூ. 300 அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான பசுவும் கன்றும் உள்ள விளக்கும், பிரசாதமும் அனுப்பி வைக்கப்படும். இதில் அனைவரும் கலந்து கொண்டு வாழ்வில் ஒளி பெறுவோம்.



மாட்டுத்தொழுவத்தில் நடைபெறும் கோடி தீப ஆராதனை



## குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும். மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கி சீரும் சிறப்புமாய் வாழவைப்பதும் வலம்புரி சங்கே!

வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்று சேரவும், மாணவர்களின் கல்வியறிவு பெருகவும், அடிக்கடி வரும் நோய்களை தடுக்கவும், வீடு மற்றும் வியாபார ஸ்தலத்தில் கண் திருஷ்டி நீங்கவும், வாடிக்கையாளர்களை ஈர்க்கும் சக்தி கிடைக்கவும், ரியல் எஸ்டேட் மற்றும் பங்கு வியாபாரத்தில் யோகம் பெறவும், சொந்த வீடு வாங்கவும், பூர்வீக சொத்துக்கள் நிலைக்கவும், வாஸ்து குறைகள் நீங்கவும், கடன் பிரச்சனைகள் தீரவும், குடிப்பழக்கம், தீயபழக்கம், தீயசக்தியை நெருங்க விடாமல் தடுக்கவும் ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.6,600 அனுப்புவோருக்கு பசுவிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட மாங்கல்ய மாற்றும் ஒரிஜினல் வலம்புரி சங்கு ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

**தாங்கள் விரும்பும் நாட்களில் தங்கள் சார்பாக கோபூஜை, கோதானம், சங்கு பூஜை, தீப ஆராதனை செய்து தங்கள் சார்பாக அனைத்து பசுக்களுக்கும் அன்னதானம் வழங்கப்படும்**

## நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு வருடத்திற்கான ரூ.365 ஐ கோமாதாவின் பராமரிப்பிற்கு அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான கோமாதா டாலர் மற்றும் கோமாதாவின் வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும்

பசுவின் ஆகாரத்திற்கும், கோதானத்திற்கும், கோடி தீப ஆராதனைக்கும், வலம்புரி சங்கிற்கும் நன்கொடையை CHEQUE/DD/MO ஆக SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI என்ற பெயரில், கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பும் போது தங்களின் பெயர், கோத்திரம், நட்சத்திரம், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். நன்கொடை அனுப்புவோருக்கு பிரசாதங்களும், பூஜிக்கப்பட்ட மேற்கண்ட பொருட்களும் மற்றும் சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

# பசுமடம்

(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)

வயதான, ஊனமுற்ற, நோயுற்ற, ஆதரவற்ற பசுக்களை சுதந்திரமாக பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77.

OFF: 8754 555 555, MADAM: 8754 666 666 | www.shrigosala.com




பசு மடத்தில் உள்ள வயதான பசுக்கள்

## சிறப்புத் தலையங்கம்

# தீமை திட்டமா? தமிழகத்துக்கு அனுப்பு!

காவிரி டெல்டாவின் ஒரு பகுதியான புதுக்கோட்டை மாவட்டத்தின் கடைகோடியில் அமைந்திருப்பது தான் நெடுவாசல். மாவட்டத்தின் பிற பகுதிகள் நீரின்றி காய்ந்து கிடக்கிறது.




நெடுவாசலும், அதை சுற்றியுள்ள கிராமங்களிலும் பெரும்பாலான ஆண்டுகளில் பசுமைவயல்வெளியையும், தென்னஞ்சோலையையும், பலா மரங்களையும் காண முடியும். தற்போது அதற்கு வரப்போகும் ஆபத்தை உணர்ந்து கடல் தாண்டியும், நாட்டின் பிற பகுதிகளுக்கும் வருமானத்திற்காக வேலை தேடி சென்ற இளைஞர்கள் தங்கள் மண்ணை காக்க பெட்டி படுக்கையுடன் வந்திறங்கியுள்ளனர். ஜல்லிக்கட்டு போராட்டம் முடிவுக்கு வந்த 30 நாட்களுக்குள் மீண்டும் ஒரு போராட்டம் மக்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

நாடு முழுவதும் இயற்கை எரிவாயு எடுப்பதற்கு ஏற்ற 31 நிலப்பகுதிகளை கண்டறிந்து அதற்கான அனுமதியை மத்திய அரசு கடந்த 15ம் தேதி வழங்கியது.

2016-க்கு முன்பு வரை மீத்தேன், பெட்ரோலியம், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களை எடுப்பதற்கு தனித்தனியாக அனுமதி பெற வேண்டும்.

கடந்த 2016 மார்ச்சுக்குப் பிறகு ஹைட்ரோ கார்பன் என்ற பெயரில் ஒரே அனுமதியில் எந்த எரிபொருளையும் எடுக்கலாம். அந்த அடிப்படையில் நெடுவாசல் பகுதியில் ஹைட்ரோ கார்பன் என்ற திட்டத்தை அனுமதித்திருப்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே காவிரி டெல்டாவில் மீத்தேன் எடுக்கும் திட்டத்தை நீண்ட போராட்டத்திற்கு பிறகு தற்காலிகமாக தடுத்து நிறுத்தினர்.

வளைகுடா நாடுகளில் எண்ணெய் கிணறுகளில் பணியாற்றுவோர்க்கு மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுவதை தடுக்கும் நோக்கில் தான் 45 நாள் வேலை, 45 நாள் ஓய்வு தரப்படுகிறது. ஓய்வு காலத்தில் எண்ணெய் கிணறுகள் இயங்காது.

கடலில் கப்பல்கள் மோதி சிந்திய எண்ணெய்யை வாளி கொண்டு அகற்றியவர்கள் நாம். அப்படிப்பட்ட நிலையில் இயற்கை எரிவாயு எடுக்கும் போது பாதிப்புகள் ஏற்பட்டால் அதை தடுப்பதற்கு நம் வசமுள்ள யுக்திகள் எல்லாம் விடை தெரியாத வினாக்கள். காவிரி விவகாரம், விவசாயிகள் தற்கொலை என எண்ணற்ற பிரச்னைகள் தமிழக விவசாய நலன்களுக்கு எதிராகவே உள்ளன.

ஹைட்ரோகார்பன் திட்டமும் விவசாயிகளின் எதிர்காலத்தை சிதைத்து விடும் அச்சம் உள்ளது. அச்சத்தை போக்கவேண்டியது அரசின் பிரதான கடமை.

அதற்கு பதில் வளர்ச்சி என்ற பெயரில் விவசாயிகளுக்கு எதிராக தொடர்ந்து யுத்தம் நடத்தினால் அதை தடுக்கும் எண்ணம் தமிழக இளைஞர்களின் மனதில் வேரூன்றி விட்டது. அதை உணராமல் எதிர்வினையாற்றினால் மற்றொரு வாடிவாசல் புரட்சியை காண வேண்டியிருக்கும்.

– ஆசிரியர்



# மாற்றத்திற்கான பயணம்

சிறப்புக் கட்டுரை

இது புது யுகம். இதுவரை நிபுணர்களை அரசியல்வாதிகள் பயன்படுத்திக்கொண்ட காலம் போய், இப்போது நிபுணர்கள் அரசியல்வாதிகளைக் கையாளத் தொடங்கும் யுகத்துக்குள் நாம் நுழைந்திருக்கிறோம். அதாவது, மறைமுகமாக நிபுணர்கள் வடிவில் பின்னிருந்து அரசியல்வாதிகளை இயக்கும் 'நிழல் அதிகார மைய'ங்களின் யுகத்துக்குள் நாம் நுழைந்திருக்கிறோம்.

இந்தப் புதிய யுகத்தில் அரசியல்வாதிகள் வெறும் சுதாபாத்திரமாகி வருகின்றனர். எதை உடுத்தினால் எடுப்பாக இருக்கும்? எதைப் பேசினால் எடுபடும்? எதை அறிவித்தால் ஓட்டுகளை அள்ளலாம்? எந்த அதிர்ச்சி நடவடிக்கையை எடுத்தால் மக்களின் கவனத்தை நம் மீதான விமர்சனங்களிலிருந்து வேறொன்றை நோக்கித் திருப்பலாம்? இவை ஒவ்வொன்றையும் தீர்மானிக்கத் தொழில்முறை நிபுணர்கள் உள்ளே வந்தாயிற்று. அதாவது, என்னுடைய கை, கால்களுக்குக் கொஞ்சம் பூச்சு அடித்துப் பளபளப்பாக்கி மக்களிடம் நான் செல்வாக்கு பெற்ற காலம் போய், மக்களிடம் செல்வாக்குள்ள பளபளப்பான கைகள், கால்களை வாங்கி நான் பொருத்திக்கொள்ளும் நிலை இது. அப்படியென்றால், என்னுடைய இயக்கத்தைத் தீர்மானிக்கும் மூளை எது? சுயமாக அப்படி ஒன்று செயல்பட முடியுமா?

தமிழகத்தின் சிறுவர்களும் அரசியல் பேசுகிறார்கள். அடுத்த முதல்வராகப் பதவியேற்கவுள்ள சசிகலா நாட்டையே பேசவைத்திருக்கிறார். தன் காலத்தில் தமிழக அரசியல் களத்தின் ஒவ்வொரு வரலாற்று நிகழ்விலும் தன்னுடைய பேச்சுகளால் தன்னையும் உள்ளடக்கிக்கொண்ட ஒருவர், இதுபற்றி இன்றைக்கு என்ன நினைக்கிறார் என்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

கருணாநிதி அமைதியானதற்கு முதுமை, தள்ளாமை, நினைவிழப்பு என்று மருத்துவரீதியாக எவ்வளவோ காரணங்களை அடுக் கலாம். நான் இந்தச் சூழலைத் தர்க்கரீதியாக அணுக முயலவில்லை. ஜெயலலிதாவின் மறைவு வரை அரசியலில் வெளிப்படையாக எந்தப் பெரிய பொறுப்பிலும் இல்லாதிருந்த சசிகலா, அடுத்த இரண்டு மாதங்களில் படிப்படியாக விஸ்வரூபம் எடுப்பதையும், அதே காலகட்டத்தில் கருணாநிதி படிப்படியாக முடங்கிப்போவதையும் உருவாகிவரும் ஒரு புதிய யுகத்துக்கான இரு சகுனங்களாகவே பார்க்கிறேன்.

எழுத்தாளரும் நண்பருமான இமையம் கருணாநிதியின் ரசிகர். பெரியார், அண்ணா, கருணாநிதி மூவரிடையேயான உறவு தொடர்பில் பேசும்போது குறிப்பிட்டார்

"பெரியாரும் அண்ணாவும் கருணாநிதியைக் கண்டடைந்ததல்ல விசேஷம். திருவாரூருக்குப் பக்கத்திலுள்ள திருக்குவளை மாதிரி ஒரு சின்ன கிராமத்திலிருந்து - அதுவும் சமூகரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் அத்தனை கீழிருந்த ஒரு குடும்பத்திலிருந்து - வந்த ஒரு பதின் பருவ இளைஞர், இன்றைய தகவல் தொழில்நுட்ப வசதி

ஏதும் இல்லாத அந்தக் கால கட்டத்தில், தன் தலைவர்கள் என்று பெரியாரையும் அண்ணாவையும் கண்டடைந்தார் பாருங்கள், அதுதான் விசேஷம்!"

அழகிரிசாமியின் பேச்சால் ஈர்க்கப் பட்டு, அரசியலை நோக்கிக் காலடி எடுத்து வைத்தபோது கருணாநிதிக்கு 14 வயது. கொஞ்ச காலத்திலேயே 'மாணவ நேசன்' கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கிவிட்டார். 1942-ல் அண்ணா 'திராவிட நாடு' பத்திரிகையைத் தொடங்கிய காலகட்டத்தில் கருணாநிதி 'முரசொலி'யின் பயணத்தைத் தொடங்கினார்.

'திராவிட நாடு' வெளியான ஆரம்ப நாட்களிலேயே தன்னுடைய முதல் கட்டுரையை அதற்கு அனுப்பிவிட்டார் கருணாநிதி. சில மாதங்கள் கழித்து தஞ்சாவூர் பக்கம் வந்த போது, தன் முன்னே நின்ற இளைஞர் கருணாநிதியை முதல் முறையாகப் பார்த்த போது அண்ணா திகைத்திருக்கிறார்!

ஒரு அரசியல்வாதியாகத் தன்னைத்தானே செதுக்கிக் கொண்டவர் கருணாநிதி. அது அடுக்குமொழிப் பேச்சோ, கருப்புக் கண்ணாடியோ; தன்னுடைய அரசியலின் தனித்த ஒரு அடையாளமாகத் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளும் அவருடைய முயற்சியின் நீட்சியே எல்லாமும். கருணாநிதியின் பேச்சுகள் - எழுத்துகளில் தவறுகள் இருக்கலாம்; அவருடைய நடை - உடை - பாவனைகள், கொள்கைகள், முடிவுகளில் நமக்கு முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால், அவை கருணாநிதியின் அசலான வெளிப்பாடுகள்.

அவருடைய இயல்பிலிருந்தும் விருப்பங்களிலிருந்தும் வெளிப்பட்டவை அல்லது அவராக உருவாக்கிக்கொண்டவை. கருணாநிதி மட்டும் அல்ல; நேற்றைய யுகத்தின் அத்தனை பிரதிநிதிகளும் அப்படியே உருவாகி வந்தார்கள். தங்களுடைய அரசியலைக் கொண்டுசெல்ல தங்களைச் சுற்றி ஒரு பிம்பத்தை உருவாக்கி, அதை மக்கள் மத்தியில் வெற்றிகரமாகக் கொண்டுசென்றார்களே தவிர, வெற்றிகரமான அம்சங்களைத் தனதாக்கிக்கொண்டு ஒரு பிம்பத்தை உருவாக்கி, அதன்வழி மக்களை ஏமாற்ற முற்படவில்லை.

இந்தப் புதிய யுகத்தின் மிக வெற்றிகரமான நடிகர் பிரதமர் நரேந்திர மோடி. அவர் ஒரு சிவாஜி கணேசன். வீரபாண்டிய கட்டபொம்மன் என்றால், நமக்கு எப்படி அந்த வேடமிட்டு நடித்த சிவாஜி கணேசனின் முகமே நினைவுக்கு வருமோ அப்படி கதாபாத்திரத்தையே தானாக மாற்றிவிடும் வல்லமை மிக்கவர் மோடி. கூடவே, தன்னைப் பின்னிருந்து இயக்கும் நிழல் அதிகார மையமான ஆர்.எஸ்.எஸ்ஸை மெய் மறக்கச் செய்யும் ஆற்றல் மோடியிடம் உண்டு.

அகிலேஷ், ஸ்டாலின், அன்புமணி போன்றவர்கள்



இயக்கத்துக்கும் கதாபாத்திரத்துக்கும் இடையிலான எல்லை எது என்று தெரியாமல் குழம்பியவாறே பாத்திரத்தை நியாயப்படுத்த முயல்கிறார்கள். சசிகலா இவர்கள் அவ்வளவு பேரையும் ஏப்பம் விட்டுச் செரிக்க முயல்கிறார்.

பேராசை வேட்கையின் உச்சத்தில் நிழல் அதிகார மையமே சகலத்திலும் நிஜமாக முற்படும் சாகசம் இது.

நம் முன் இருக்கும் பெரும் சவால் இந்த ஒரு சசிகலா மட்டும் அல்ல; இன்னும் இன்னும் இப்படிப் பல சசிகலாக்களாக மாறத் துடிக்கும் நிழல் அதிகார மையங்களும் எல்லா இடங்களிலும் நிழல் அதிகார மையங்களோடு கூட்டு சேர்ந்திருக்கும் மூலதனமும். இந்திய மக்களாகிய நாம் மிகச் சவாலான ஒரு காலகட்டத்தை எதிர்நோக்கியிருக்கிறோம்!

**- சண்முகவேல்**

திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் கிராமத்தில் உள்ள தங்கவேல் முதலியார் - சின்ன பொண்ணு அம்மையாருக்கு இரண்டாவது மகனாக பிறந்த த. துரைபாபு ஆகிய நான் கடந்த முப்பது ஆண்டுகளாக நான் பாடுபட்டு வந்திருப்பதும், ஏங்கியதும், என்னை நானே அறியவேண்டும் என்பதற்கும், கடவுளை நேருக்கு நேராகக் காணவேண்டும் என்பதற்கும், மோட்சத்தை அடைய வேண்டும் என்பதற்குமே.

இந்த லட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகவே நான் வாழ்கிறேன். நடமாடுகிறேன். நான் இருப்பதும் அதற்காகவேதான். நான் பேசுவன, எழுதுவன, ராஜீயத் துறையில் முயற்சி செய்வன ஆகிய யாவும் இக்குறிக்கோளைக் கொண்டவையே.

ஆனால், ஒருவருக்குச் சாத்தியமாவது எல்லோருக்குமே சாத்தியமாகும் என்பதை நெடுகிலும் நம்பி வந்திருக்கிறேன் கையால், என்னுடைய சோதனைகளை ஒளிவு மறைவாகச் செய்யாமல் பகிரங்கமாகவே செய்து வந்திருக்கிறேன். இதனால், அவற்றின் ஆன்மிக மதிப்பு எந்தவகையிலும் குறைந்து விட்டதாக நான் கருதவில்லை.

தனக்கும்,தன்னைப் படைத்த கடவுளுக்கும் மாத்திரமே தெரிந்தவையாக உள்ள சில விஷயங்கள் உண்டு. அவற்றை ஒருவர் மற்றொருவருக்கு விண்டு சொல்லுவது என்பது சாத்தியமில்லாத காரியம். நான் சொல்லப் போகும் சாதனைகள் அப்படிப்பட்டவை அல்ல. ஆனால், அவை ஆன்மீகமானவை, அதை விடச் சன்மார்க்கமானவை என்றே சொல்லி விடலாம். ஏனெனில், சன்மார்க்கமே வாழ்வின் சாரம்.

வயது முதிர்ந்தவர்கள் மட்டுமின்றி, குழந்தைகளும் புரிந்து கொள்ளக்கூடிய ஆன்மிக விஷயங்கள் மட்டுமே பாரபட்சமற்ற வகையில், அடக்க உணர்ச்சியோடு அவற்றை நான் விவரிப்பேனாயின். இத்தகைய சோதனைகளில் ஈடுபட்டிருக்கும் மற்றும் பலரும் தங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஆதாரங்களை இதில் காண்பார்கள். இச்சோதனைகள், குறைகளே இன்றிப் பூரணமானவை என்று நான் சொல்லிக்கொள்வதாக யாரும் கருதி விட வேண்டாம். ஒரு மனிதன் எந்தத் துறையில் வேண்டுமானாலும் ஆராய்ச்சியோ, கட்டுரைகளோ, படைப்புகளோ உருவாக்கலாம். அதற்கு அனுபவம் இருந்தாலே போதுமானதாகும். ஆனால், அதன் பலனாகத் தான் நான் கண்ட ஆன்மிகம் சம்பந்தமான நிகழ்வுகளையும் அதிசயங்களையும் அற்புத ஆலயங்களின் ஸ்தல வரலாறு என்ற பெயரில் எழுதுகிறேன்.

ஈசனடி போற்றி - நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க, நற்றுணையாவது நமச்சிவாயவே!

# அற்புத ஆலயங்களின் ஸ்தல வரலாறு!




ஸ்ரீ செண்பகவள்ளி உடனுறை
ஸ்ரீ காரணீஸ்வரர் திருக்கோயில்
காக்களூர்

ஆன்மிக தொடர்



காக்களூர்
**த. துரைபாபு**

பல்லாயிரம் ஆண்டுகளாக இப்புண்ணிய பூமியில் வாழ்ந்து அனுபவம் பெற்று, வாழ்வின் ஒவ்வொரு நுணுக்கங்களையும் தீர ஆராய்ந்து, இறைவனை உணர்ந்து, அவனின் திருவருளைப்

பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்த பூமி நம் பாரதபூமி. கடந்த சில நூற்றாண்டுகளில் இப்பூவுலகில் வேறு பகுதியில் வாழ்ந்து வந்தவர்களின் பேராசை, பொறாமை, அபகரிக்கும் தன்மை போன்ற குணங்களினாலும் நம்மிடையே ஒற்றுமையின்றி தவித்ததாலும், நம் செல்வங்களையும், ஞானத்தையும், பல அரிய பொக்கிஷங்களையும் இழந்து நிற்கிறோம். அது மட்டுமின்றி, இவ்வுலகில் வேறுபகுதியில் இருப்பவர்கள் நம் அறியாமையை பயன்படுத்தியும் நம்மிடம் மிஞ்சியிருக்கும் செல்வங்களை குறிவைத்தும் இன்றும் நம்மை தொடர்ந்து தாக்கி வருகிறார்கள்.

இச்சமயத்தில் நாம் இறைவனை வணங்கி, அவன் அருள் பெற்று, நம் ஞானத்தை மீண்டும் பெறவும், நம் செல்வங்களை பெறவும், நம் மக்களை காக்கவும், நாம் மக்களுக்காக தொண்டாற்றவும் வேண்டும். இதைப்போன்ற ஒரு தெய்வீக வேலை இவ்வுலகில் வேறு எதுவுமில்லை. ஓம் நமசிவாய.

திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் கிராமத்தில் எழுந்தருளிய அருள்மிகு செண்பகவள்ளி உடனுறை ஸ்ரீ காரணீஸ்வரர் திருக்கோயில் வரலாற்றைப் பார்ப்போம்...

ஒரு சமயம் ஸ்ரீராமபிரானும் சீதாப் பிராட்டியும் திருமணம் முடிந்து தேசவளம் காணும் வண்ணம் நகர் வலம் வந்தபோது திருவள்ளுரை அடுத்துள்ள புண்ணிய பூமியாகிய காக்களூருக்கு வருகை செய்தார்கள்.

வெகு தூரப் பிரயாணக்களைப்பினால் சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு இருந்தார்கள். ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி ஸ்ரீ சீதா தேவியின் திருமடியில் தலை வைத்து தூங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் பகுதியை அரசாண்டு கொண்டு இருந்த காகசுரன் என்ற அசுரன் காக்கை உருவம் எடுத்து வந்து சீதையின் திருமேனியை மனதில் கெட்ட எண்ணத்துடன் அலகினால் தீண்டினான்.

அம்மையின் பொன்மேனியில் இருந்து உதிரம் ராமபிரான் மீது வடிந்ததும் கண் விழித்து நிலைமையை உணர்ந்த ஸ்ரீ ராமபிரான் சீதையிடம் சகியே, இது காகம் அல்ல. காக உருவத்தில் வந்த அசுரன் இவன் நல்லவன் அல்ல. மனதில் கெட்ட எண்ணம் கொண்டுள்ளவன். உன்னைத் தீண்டிய இவனை ஆஞ்சநேயன் அழிப்பான் என்று சாபம் இட்ட மறு நிமிடம் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கும், காகாசுரனுக்கும் கடும் போர் நடந்ததில் இறுதியில் ஆஞ்சநேயர் காகாசுரனை வென்று வீழ்த்தினார்.

அசுரனும் ஸ்ரீ ராமபிரான் திருவடிகளைப் பற்றி மன்னிக்க வேண்டினான். இனிவரும் எதிர் காலத்தில் இந்த மாதிரி தவறுகள் நடக்கக்கூடாது என்றும் தவறு செய்த உனது ஒரு கண்பார்வை குறைவாகவே, இருக்கட்டும் என்று அருளினார் ராமபிரான். அன்று முதல் இன்றுவரை காகம் ஒரு



பக்கம் பார்வை குறைந்து, மறுபக்க, கண்கொண்டு தலையை சாய்த்துப் பார்ப்பதை காண்கிறோம். காகாசுரன், ஸ்ரீ ராமபிரானிடம் ஒரு வரம் வேண்டினான். இந்த ஊர் இன்று முதல் காகா சூரப்பட்டணம் என விளங்க வேண்டும் என துதித்து நின்றான்.

அருள்பாலித்த அண்ணல் அவ்வாறே ஆகட்டும் என்றார். அதன்படி காகாசூரப் பட்டணம் என்று அழைக்கப்பட்ட இந்த ஊர் காக்களூர் என்று மருவி வழங்கலாயிற்று. இந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற காக்களூரில் வீர ஆஞ்சநேயராக அமர்ந்து அடியார்களுக்கு அருள் வழங்கும் கோவில் உள்ளது.

வீர ஆஞ்சநேயர், ஸ்ரீ ராமர், சீதாவும், பூசித்த சிவலிங்கம் தான் இப்போது தாமரை புஷ்கரணியின் கரையில் பூமிக்குள்ளிருந்து வெளி வந்து அருள்மிகு காரணீஸ்வரராக தோன்றி கோவில் கொண்டு அருள்பாலித்து வருகிறார் என அறியப்படுகிறது. உமையம்மையும் ஸ்ரீ செண்பக வல்லியாக உருவெடுத்து சுவாமியுடன் காட்சி கொடுத்து அரள்தரும் திருக்கோவில் இது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், ஸ்ரீ சுந்தரமூர்த்தி, ஸ்ரீ மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் பெருமக்களும் ஒவ்வொரு திசையிலிருந்து இந்த இறைவனை வழிபட்டதாகவும் அதன்படி நான்கு திசை வாயில்களை கொண்டதாக உள்ளது இத் திருக்கோவில். இந்த திருக்கோவில் திருப்பணி தொடங்கிய அன்று ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

மலேசியாவில் இருந்து திருக்கைலாய தரிசனத்திற்குச் சென்ற ஏழு பெண்மணிகளும் மலேசிய வங்கி மேலாளர் திரு. ஆதிமூலம் அவர்களும் சென்னை வந்திருந்தார்கள்.

காக்களூரில் சிவாலய திருப்பணித் தொடக்கம் என்றவுடன் ஏழு பெண்மணிகளும் ஒரே வண்ணத்தில் ருத்ராட்சமாலை அணிந்து வானுலகத்தில் இருந்து திருக்கியிலாயம் சென்று நேராக காக்களூர் விஜயம் செய்திருப்பதுபோல அமைந்திருந்தது. சப்தகன்னிகளாக காட்சி நல்கி நின்றார்கள். வந்திருந்த பக்த கோடிகள் அனை வரும் இந்த தெரய்வீக காட்சியை கண்டு மெய் மறந்து வணங்கினார்கள். இப்போதும் இத்திருக் கோயிலில் சப்த கன்னிகள் சன்னதி வெகு அழகாக நிறுவி வழிபடப்படுகிறது.

சுவாமி சன்னதிக்கு எதிரில் சந்திரன், சூரியன், சன்னதி உள்ளது. அதேமாதிரி ஒவ்வொரு நாளும் புலர் காலையில் சூரியனும், அந்திப்பொழுதில் சந்திரனும் ஒளிக்கதிர்களை இறைவனுக்கு சமர்ப் பித்து வருவதையும் காண முடியும். - **தொடரும்**





தொடரும்...

# ஆன்லைன் மோசடிகள்

ஆன்லைனில் நூதன மோசடி திட்டம் மூலம் 5 ஆயிரம் பேரிடம் ரூ.8 கோடி மோசடி செய்த குற்றத்துக்காக 4 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர். 8 மாதங்களில் 5 ஆயிரம் பேரிடம் ரூ.8 கோடி மோசடி செய்துள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

ஆன்லைனில் 4,866 முதலீட்டாளர்களிடம் அவர்கள் விரும்பும் விளம்பரங்களுக்கு மதிப்பெண் அளித்தால் அதற்கு ரொக்கத் தொகை அளிப்பதாகக் கூறி இத்தகைய மோசடியை நடத்தியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மெடிகாம் என்ற ஆன்லைன் நிறுவனத்தின் மூலம் இத்தகைய மோசடியை இவர்கள் செய்துள்ளனர். இது தொடர்பாக நிறுவன இயக்குநர்கள் தௌலத் சிங் ஷெகாவத் (22), பாரத் குமார் (27), நிறுவனத்தின் மேலாளர் ராம் குமார் சர்மா, நிறுவனத்தின் பங்குதாரரான அஜய் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிறுவனத்துக்கு இணைய தளத்தை வடிவமைத்துத் தந்தவரை போலீசார் தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்ட ஷெகாவத், பாரத் ஆகிய இருவரும் முதலில் தங்கள் பெயரில் நிறுவனத்தைத் தொடங்கியுள்ளனர். இதற்கு பின் புலமாக அஜய் செயல்பட்டுள்ளார். தகவல் தொழில் நுட்பம் மற்றும் சமூக வர்த்தகம் உள்ளிட்ட பணிகளை ராஜ்குமார் சர்மா மேற்கொண்டார்.

இவர்கள் நிறுவனத்துக்கு முன்மாதிரியான நிறுவனம் வெப் வொர்க் டிரேட் லிங்க் ஆகும். இந்நிறுவனத்தின் நிறுவனர்கள் சமீபத்தில் கைதானது குறிப்பிடத்தக்கது.

பாரத் மற்றும் ராஜ்குமார் ஆகிய இருவரும் கடந்த ஆண்டு ஜூனில் தங்கள் நிறுவன செயல்பாடுகளை இவர்கள் தொடங்கியுள்ளனர். கடந்த ஆண்டு செப்டம்பரில் இவர்களது நிறுவனம் மெடிகாம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. தங்கள் நிறுவனத்துக்காக ரூ. 5 லட்சம் செலவிட்டு இணைய தளத்தை உருவாக்கியுள்ளனர்.

நொய்டாவைச் சேர்ந்த நிறுவனத்தின் மோசடி சமீபத்தில் வெளியாகி அதன் நிறுவனர்கள் கைதானதைத் தொடர்ந்து இந்நிறுவன நிறுவனர்கள் நிறுவனத்தை மூடிவிட்டு வெளிநாட்டுக்கு தப்பிவிட திட்டமிட்டிருந்தனர். இவர்களது வங்கிக் கணக்கில் பிப்ரவரி 7-ம் தேதி வரை ரூ. 8 கோடி தொகை டெபாசிட் செய்யப்பட்டிருந்ததாக குற்றப் பிரிவு காவல்துறை கண்காணிப்பாளர் சுமித் குமார் தெரிவித்துள்ளார்.

முதலீட்டாளர்கள் அவர்களுக்கென்று தரப்படும் இணையதளத் தில் தோன்றும் விளம்பரங்களுக்கு 'லைக்' தெரிவிப்பதன் அடிப்படையில் அவர்களது வங்கிக் கணக்கில் பணம் போடப்படும் என தெரிவித்துள்ளனர். ஆனால் எந்தவொரு விளம்பர நிறுவனத்தோடும் இந்நிறுவனத்துக்கு தொடர்பு கிடையாது என்றும் அவர் கூறினார்.

ராஜீவ் சவுக் பகுதியில் காரின் அருகில் நின்று கொண்டிருந்த ஷெகாவத், குமார், அஜய் ஆகியோரிடம் போலீஸார் விசாரணை நடத்தினர். நான்காவதாக கைது செய்யப்பட்ட நபர் தப்பியோட முயன்ற போது அவரை போலீஸார் பிலாஸ்பூர் அருகே கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 12-க்கும் அதிகமான ஏடிஎம் கார்டுகள், வங்கி கணக்கு புத்தகங்கள், பல்வேறு வங்கிகளின் காசோலை புத்தகங்கள், 3 லேப் டாப்கள், டேப்லெட் மற்றும் ஸ்விப்ட் டிசையர் கார் ஆகியவற்றை போலீஸார் பறிமுதல் செய்தனர். சில மாதங்களுக்கு முன்புதான் இந்த கார் வாங்கப்பட்டுள்ளது. சிட்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்கள் அனைவரையும் 6 நாள் நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். - ரமேஷ்குமார்

## கண்டுகொள்ளாத காவல்துறை?



சென்னையில் இப்போதே குடிநீர் பஞ்சம் தலைவிரித்தாட ஆரம்பித்து விட்டது. வரும் மே மாதத்தில் சொட்டு தண்ணீர் கூட கிடைக்காத நிலை ஏற்படும் என்று அஞ் சப்படுகிறது. வீராணம் ஏரி தண்ணீர் சப்ளை கைவிட்ட நிலையில், என்எல்சி திட்டம் கைகொடுக்குமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.

சென்னை மாநகராட்சி பகுதிகளின் குடிநீர் தேவையை பூண்டி, செம்பரம்பாக்கம், சோழவரம், புழல் ஆகிய 4 ஏரிகள் பூர்த்தி செய்து வரு கின்றன. இந்த ஏரிகளில் 11 ஆயிரத்து 57 மில்லியன் கன அடி தண்ணீர்தான் தற்போது உள்ளது. இது கடந்தாண்டை ஒப்பிடுகையில் ஐந்தில் ஒரு பங்காகும்.

குடிநீர் தேவைக்கு மாற்று ஏற்பாடுகளில் சென்னை குடிநீர் வாரியம் இறங்கியுள்ளது. வடகிழக்கு பருவமழை பொய்த்து போனதால், ஆழ்குழாய் கிணறுகளில் இருந்து தண்ணீர் விநி யோகமும் கேள்விக் குறியாகி உள்ளது.

எனவே அடுத்த 40 நாட்களுக்குத்தான் இந்த ஏரிகளில் இருக்கும் நீர், குடிநீர் தேவைக்கு போதுமான தாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த 140 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தமிழகம் வறட்சியை எதிர்நோக்கியுள் ளது. தற்போது சென்னைக்கு குடிநீர் வழங்குவதில் கிருஷ்ணா நதி நீரின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கிறது. ஆந்திர அரசிடம் நடந்த பேச்சுவார்த்தை மூலம் 1 டிஎம்சி தண்ணீரை வழங்க ஆந்திர அரசு உறுதி அளித்துள்ளது.

ஆனால் தற்போது இந்த அளவும் குறைக் கப்பட்டுள்ளது. இதே போல் சென்னைக்கு குடிநீர் வழங்குவதில் வீராணம் ஏரியின் பங்கு மிக முக்கியமானது.

# சென்னையில் குடிநீர் பஞ்சம்







இங்கிருந்து சென்னைக்கு பைப் மூலம் குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது. காவிரி நீர் கல்லணையில் இருந்து கீழணைக்கு வந்து அங்கிருந்து, வடவாறு வழியாக ஏரிக்கு தண்ணீர் வரும். ஏரியின் மொத்த கொள்ளளவு 47.50 அடி. ஆரம்பத்தில் 1.44 டி.எம்.சி தண்ணீர் சேமிக்க முடிந்தது. தற்போது ஏரி தூர்ந்து போனதால், 0.96 டி.எம்.சி தண்ணீரை மட்டுமே சேமிக்க முடியும்.

புதிய வீராணம் திட்டம் மூலமாக சென்னைக்கு தினமும் விநாடிக்கு 77 கன அடி வீதம் குடிநீர் அனுப்பப்படுகிறது. தற்போது வீராணம் ஏரியின் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததால் சென்னைக்கு அனுப்பும் நீரின் அளவும் படிப்படியாக குறைக்கப்பட்டு, 20ம் தேதி முதல் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து சிதம்பரம் கோட்ட பொதுப் பணித்துறை நிர்வாக பொறியாளர் ராமமூர்த்தி கூறுகையில்,

வீராணம் ஏரிக்கு தற்போது நீர்வரத்து இல்லாததால் சென்னைக்கு அனுப்பப்பட்டு வந்த 77 கன அடி படிப்படியாக குறைக்கப்பட்டு முழுமையாக நிறுத்தப்பட்டது. வீராணம் ஏரி தண்ணீர் நிறுத்தப்பட்டாலும் சென்னை குடிநீர் தேவையையொட்டி என்எல்சி உபரிநீர் அதே வீராணம் ஏரி பைப் லைன் மூலம் சென்னைக்கு குடிநீர் எடுத்து செல்ல திட்டம் தீட்டப்பட்டுள்ளது" என்றார்.

என்எல்சி இந்தியா நிறுவனத்தின் மூன்று சுரங்கங்களில் நிலக்கரி வெட்டி எடுக்கும்போது பூமிக்கடியில் உள்ள நீர், ராட்சத குழாய்கள் மூலம் வெளியேற்றப்படுகிறது. இந்த நீர் நெய்வேலிக்கு அருகில் உள்ள வாலாஜா ஏரிக்கு அனுப்பப்படுகிறது. அது, விவசாயிகள் பாசனத்துக்கு பயன்படுத்தியது போக மீதமுள்ள நீர், தியாகவள்ளி என்ற இடத்தில் கடலில் கலக்கிறது. என்எல்சி சுரங்கத்தில் கிடைக்கும் தண்ணீரை சென்னைக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

என்எல்சி சுரங்கத்தில் இருந்து வினாடிக்கு 100 கன அடி முதல் 380 கன அடி வரை வெளியேற்றப்படும். வாலாஜா ஏரியில் இருந்து 6 கிலோ மீட்டர் தூரத்தில் வடக்குத்து கிராமத்தில் வீராணம் ஏரியின் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. இங்கிருந்து தான் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு பப்பிங் (நீரேற்றம்) மூலம் சென்னைக்கு அனுப்பப்படுகிறது.

தற்போது புதிய திட்டம் மூலம் வாலாஜா ஏரியில் இருந்து வடக்குத்து சுத்திகரிப்பு நிலையத்துடன் இணைக்க ராட்சத குழாய்கள் அமைக்கதிட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல் வடிவத்துக்கு வந்தால் சென்னைக்கு நிரந்தரமாக குடிநீர் கிடைக்கும்.

**இதுகுறித்து பொதுப்பணித் துறையின் விரிவான சாத்தியக் கூறுகள் ஆராய்ந்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது.**

– சரவணன்

# வாடிவாசல் TO நெடுவாசல்

# மெரினா புரட்சி 2

தமிழகத்தில் சமீபத்தில் ஏற்பட்ட அரசியல் பரபரப்பை தொடர்ந்து, அடுத்த பரபரப்பாக உருவெடுத்திருப்பது நெடுவாசல் ஹைட்ரோ கார்பன் விவகாரம்.

கார்பன் மற்றும் ஹைட்ரஜன் சேர்ந்த கலவைதான் ஹைட்ரோ கார்பன். நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, தாவரங்கள் நிறைந்துள்ள பகுதிகளில் இவை கிடைக்கும்.

எரிபொருள், ரசாயன கரைப்பான் ஆகியவை இதன் பயன்பாடு. சாயம், பூச்சிக்கொல்லி மருந்து, பிளாஸ்டிக் ஆகியவற்றின் மூலப் பொருளாகவும் அமைந்துள்ளது. பல்வேறு ஹைட்ரோ கார்பன்களின் கலவை பெட்ரோலியம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹைட்ரஜன் அணுவுடன் சேரும் கார்பன் அணுவின் எண்ணிக்கையைப் பொறுத்து அதன் பெயர்கள் மாறுபடுகின்றன.



ஒரு கார்பன் இடம் பெற்றுள்ள அமைப்புக்கு மீத்தேன், இரண்டு இருந்தால் ஈத்தேன், மூன்று புரோபேன் இப்படி 10 கார்பன் இருந்தால் டெக்கேன் என்று வரிசையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவை அனைத்துமே வாகனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் ஹைட்ரோ கார்பன்கள் எரிபொருளாக பயன்படும் போது அதிலிருந்து வெளியாகும் நச்சுப் புகை காற்று மண்டலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும், புவி வெப்பமயமாதல் பிரச்சினையை அதிகமாக்கும்.

ஹைட்ரோ கார்பன்கள்தான். எனவே, மீத்தேன் என்பது ஹைட்ரோ கார்பன் எனப்படும் பெரிய பிரிவின் கீழ் உள்ள சிறிய வகைப்பாடு என்பதை உணர முடியும்.

ஆனால், நெடுவாசலைப் பொறுத்தமட்டில் சுமார் 2500 மீட்டர் (8202 அடி) ஆழத்துக்கும் அதிகமாக நிலத்தைத் துளையிட்டு அதிகப்படியான நீரை வெளியேற்றும் நிலை உள்ளது. இதனால் நிலத்தடி நீர் வற்றும் அபாயம் உள்ளது. இதிலிருந்து வெளியாகும் நச்சு தோல் வியாதிகள் மற்றும் புற்றுநோய்க்கு காரணமாக அமையும், விளைநிலங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்படையும் என்பது குற்றச்சாட்டாக உள்ளது.

கடந்த பிப்.15-ம் தேதி நெடுவாசல் உட்பட இந்தியாவில் 31 இடங்களில் ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்த எண்ணெய் நிறுவனங்களுக்கு ஹைட்ரோ கார்பன் எனும் இயற்கை எரிவாயு எடுக்க 15 ஆண்டுகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்தது.

இந்த தகவல் புதுக்கோட்டை மாவட்டத்தில் காட்டுத் தீ போல பரவியது. இதுகுறித்து தகவல் வெளியான மறுநாளே நெடுவாசல் கிராம மக்கள் ஒன்றுகூடி



இதைத் தொடக்கத்தில் இருந்து எதிர்க்க வேண்டுமென முடிவெடுத்தனர்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் எண்ணெய் நிறுவனங்கள் எரிபொருள் சோதனை பணியைத் தொடங்கியபோது கண்டுகொள்ளாது இருந்த மக்கள், எரிவாயு எடுக்க அனுமதி அளித்திருப்பதாக வெளியான தகவல்தான் கிளர்ச்சி அடைய வைத்தது. இந்த அளவுக்கு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியது டெல்டா மாவட்டத்தில் மத்திய அரசு கொண்டுவந்த மீத்தேன், ஷேல் காஸ் எடுக்கும் திட்டம்தான்.

விவசாயிகளின் எதிர்த்து போராடியதால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அதில் ஏற்பட்ட விழிப்புணர்வுதான் நெடுவாசலில் எரிவாயு எடுக்கும் திட்டத்தை எதிர்க்க காரணமாக அமைந்துள்ளது.

பிப்ரவரி 16-ம் தேதி அப்பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள், விவசாயிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் புதுக்கோட்டை ஆட்சியர் சு.கணேஷை நேரில் சந்தித்து, இத்திட்டத்தை தடுத்து நிறுத்துமாறு மனு அளித்தனர். பின்னர், தொடர்ந்து ஆர்ப்பாட்டம், தர்ணா என போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எரிவாயுவினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து உள்ளூர் மக்களுக்கும் தெரியவந்ததைத் தொடர்ந்து, தற்போது கூலி வேலைக்குக்கூட செல்லாமல் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள், விவசாயிகளும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர். புதுக்கோட்டை அரசுக் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளையும், வழக்கறிஞர்கள் நீதிமன்ற பணிகளையும் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் ஆய்வு செய்த ஓஎன்ஜிசி அலுவலர்கள் இங்கு மண்ணெண்ணெய் இருப்பதாக தெரிகிறது.

ஆகையால், இந்த நிலத்தை ஆய்வுப் பணிக்கு கொடுங்கள். அதற்கு ஆண்டுக்கு குத்தகை அடிப்படையில் தொகை தருகிறோம் என்றார்கள். நானும் கொடுத்தேன். என்னைப் போல மேலும் 3 விவசாயிகள் நிலம் கொடுத்துள்ளனர். எங்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு ஆண்டுதோறும் தொகை கொடுத்து வருகின்றனர்.

எரிபொருள் சோதனை மேற்கொள்வதற்காக ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்ட இடத்தில் இருந்து




சுமார் 100 மீட்டரில் எனது விவசாயத்துக்கான ஆழ்துளை கிணறு உள்ளது. இங்கு சுமார் 1.5 கிலோமீட்டருக்குள் 21 ஆழ்துளை கிணறுகளை அமைத்து விவசாயிகள் பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். ஆண்டு முழுவதும் எந்தப் பயிரையும் சாகுபடி மேற்கொள்வதற்கு ஏற்ப வளமுள்ள பகுதி. எண்ணெய் நிறுவனத்தினர் எரிபொருள் சோதனையின்போது எனது ஆழ்துளை கிணற்றில் இருந்து தண்ணீரோடு எண்ணெயும் சேர்ந்து வந்தது. பிறகு, எரிவாயு சோதனை மேற்கொண்டபோது அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர் கருகிவிட்டது. தொடக்கத்தில் எங்களுக்கு இதுபற்றி தெரிய வில்லை. அதனால் விட்டுவிட்டோம். தற்போது உண்மை புரிவதால் இதை எதிர்க்கிறோம்.

தமிழகத்தின் வறட்சி மாவட்டங்களில் ஒன்று புதுக்கோட்டை. ஆயிரம் அடிக்கு ஆழ்துளை கிணறு அமைத்தும் சில இடங்களில் தண்ணீர் இல்லை. 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளம், ஏரிகள் வறண்டுள்ளன. இந்த மாவட் டத்தின் கிழக்குப் பகுதியில் அநேக இடங்களில் நூற்றுக்கணக்கான ஆழ்துளை கிணறுகளை அமைத்து தண்ணீரை வெளிக்கொணர்ந்து நெல், சோளம், கடலை, வாழை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இத்தகைய பசுமையான பகுதிகளில் இயற்கை எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனம் (ஓஎன்ஜிசி) அடுத்தடுத்து எரி பொருள் சோதனை முயற்சியில் கடந்த சில ஆண்டுகளாக ஈடுபட்டு வந்தது. அதன் தொடக்கமாக வடகாடு ஊராட்சி கல்லிக் கொல்லையில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு மாணிக்கவாசகம் உள்ளிட்ட 4 பேரிடம் இருந்து சுமார் 4 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கி அதில், சுமார் 5 ஆயிரம் அடி ஆழத்தில் ஓஎன்ஜிசி நிறுவனத்தின் மூலம் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டது. அதிலிருந்து எரிபொருள் சோதனை மேற்கொள்ளப் பட்டது. அதன்பிறகு, அந்த இடத்தை அப்படியே மூடி வைத்துவிட்டுச் சென்று விட்டனர்.

இதேபோல, கோட்டைக்காடு, கருக்காகுறிச்சி, வாணக்கன்காடு, நெடுவாசல் (நல்லாண்டார் கொல்லை) ஆகிய இடங்களில் விவசாயிகளிடம் இருந்து நிலங்களைக் குத்தகைக்கு வாங்கி, அதில் ஆழ்துளை கிணறுகளை அமைத்து எரிபொருள் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது, அந்த ஆழ்துளை கிணற்றில் இருந்து கருப்பு நிறத்தில் எண்ணெய் எடுத்து உள்ளூரிலும், வெளியூருக்கு கொண்டு சென்றும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அந்த எண்ணெய் அங்குள்ள தொட்டி களிலும் கொட்டி வைக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த ஆழ்துளை கிணறுகளின் மேல் பகுதியில் சுமார் 30 அடி உயரத்துக்குமேல் தீ பற்றவைத்து எரியவைத்து எரிவாயுவின் தன்மை குறித்தும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

எந்தப் பணிகளை மேற்கொண்டாலும் அதைப்பற்றி உள்ளூரில் யாருக்கும் தெரியப்ப டுத்துவதில்லை. மேலும், அந்தப் பகுதிக்குள் யாரையும் அனுமதித்ததும் இல்லை. தூரத்தில் நின்றுதான் மக்கள் வேடிக்கை பார்த்தனர். அப்போதுவரை யாரும் அந்த எண்ணெய் நிறுவனங்களிடம் பெரிய அளவில் உள்ளூர் மக்கள் கேள்விகளை முன்வைக்கவில்லை.

– வடிவேல்



# கமல் தொடங்கும் புதிய கட்சி?

தமிழக அரசியலில் நிலவும் சர்ச்சைக் குறித்து கமல் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மாதவன் தன்னுடைய கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அதிமுக பொதுச்செயலாளர் சசிகலா இருவருக்கும் இடையே பனிப்போர் ஏற்பட்டுள்ளது. தமிழக அரசியல் சூழலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சமீப காலமாக தமிழகத்தில் நடைபெறும் விஷயங்களுக்கு தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில் கருத்து தெரிவிப்பதை வழக்கமாக வைத்துள்ளார் கமல்ஹாசன்.

தனது கருத்தை பதிவிட்டு விட்டு, மாதவன் ட்விட்டர் கணக்கை மேற்கோளிட்டு, "தமிழக சர்ச்சை குறித்து பேசவும். நமது குரல் நன்றாகக் கேட்கக்கூடியது. மோசமான அரசியலுக்கு வித்திடாதது. நீங்கள் ஒப்புக்கொள்ளாமல் போகலாம் ஆனால் அதை சத்தமாகக் கூறுங்கள்" என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாதவன், "நாம் எப்போதுமே தமிழ்நாடு எப்படி உலகத்திலேயே சிறந்த மாநிலமாக இருக்க வேண்டும் என பேசியிருக்கிறோம். நமது திறமையையும், ஆற்றலையும் வைத்து உலகுக்கே நாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்.

இந்த மகத்தான ஆற்றலை வழிநடத்த சரியான நோக்கமும், தலைமையுமே தேவை. நாம் சரியான பாதையை நோக்கி செல்ல இதுவே சரியான நேரம். மொத்த மாநிலமும் அதை நம்பவேண்டும் தங்கள் எண்ணங்களை வெளியே சொல்ல வேண்டும். இந்த சரியான நேரத்தில் அது நடக்கும் என உறுதியாக சொல்வேன்.

பேசுங்கள் நண்பர்களே. உங்கள் குரல் கேட்கப்பட வேண்டிய நேரம் இது" என்று தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார் மாதவன்.

சிலர் கமலின் ட்விட்டர் கணக்கை யாரோ ஊடுருவி விட்டார்களோ என சந்தேகித்தனர். அதற்கு கமல் தன்னுடைய ட்விட்டரில் "என்னுடையை டிவிட்டர் கணக்கை யாரும் ஊடுருவவில்லை. நீங்கள் எதிர்பார்க்கும் விஷயங்களை நான் சொல்லவில்லை என்பதால் நான் வாங்கப்பட்டேன் என்றோ என் கணக்கு ஊடுருவப்பட்டது என்றோ ஆகாது. கருத்து வேறுபாடுகள் வரவேற்கத்தக்கவை. உங்களைப் போல் தான் நானும். நான் நான் தான்." என தெரிவித்துள்ளார்.

**இதிலிருந்து கமலின் இந்த திடீர் சமூக பாசம் அரசியலாக மாறுமா என்று எதிர்பார்ப்பாக உள்ளது.**

- ஆசிரியர்



ஆ. மவுரியன்

புதிய தொடர்

## தமிழ் மண்ணின் வீர வரலாறு

# மாவீரன் மருதநாயகம்

சென்ற மாத தொடர்ச்சி.....

**1752ல் இன்றைய கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப் பாக்கத்தில் பிரெஞ்சுப் படையை மருதநாயகம் வீழ்த்தியது ஆங்கிலேயரையே ஆச்சர்யப் படுத்தியது.**

ஒருமுறை *09.11.1757*ல் மருதநாயகம் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலருடன் மட்டுமே இருந்தபோது, நூற்றுக்கணக்கான எதிரிகள் அவரை முற்றுகையிட்டனர். அதில் அவர் காட்டிய வீர தீர செயல்களும், அதுபோல் மேலும் பல வெற்றிகளும் அவருக்கு தளபதி தகுதிக்கு மேலே சென்று கவர்னர் பொறுப்பையும் பெற்றுத் தந்தது.

இன்றைய மதுரை, தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக் குடி, திருநெல்வேலி மற்றும் திருச்சியின் தெற்கு பகுதிகளை போர்கள் மூலம் வென்றெடுத்ததால், ஆங்கிலேயர்கள் *1759*ல் அவரை தெற்குச் சீமையின் கவர்னராக நியமித்தனர்.

இது ஆற்காடு நவாப் முகம்மது அலிக்கு பொறாமையை ஏற்படுத்தியது. இன்று ஆற்காடு இளவரசராக சென்னையில் வலம் வரும் இளவரசர் முகம்மது அலியின் முன்னோர்கள்தான் ஆற்காடு நவாபினர். அன்று ஆங்கிலேயர்களுக்கு அடிமைகளாக இருந்ததால்தான், அன்று பெற்ற அதே சலுகைகளில் சில இன்றும் தொடர்கிறது. துரோகமும் கூட! இன்று இந்தியாவின் மன்னர் மானியம் ஒழிக்கப்பட்ட நிலையிலும், ஆற்காடு இளவரசர் என்று சைரன் காரில் வலம் வரும் ஒரே அரச வாரிசு அன்றைய ஆற்காடு நவாபின் வழித் தோன்றலான முகம்மது அலிதான்! இருவரின் பெயரும் ஒன்று என்பதும் ஒரு ஒற்றுமைதான்.

சரி, மீண்டும் மருதநாயகம் காலத்துக்குப் போவோம்! கான்சாஹிபுக்கும், ஆற்காட் நவாபுக்கும் இடையில் பனிப்போர் தொடங்கியது. இதில் ஆங்கிலேயர் குளிர் காய்ந்தனர். திறமையற்ற நவாபையும், ஆற்றல் மிக்க தன்னையும் ஒரே தட்டில்வைத்துப் பார்க்கும் ஆங்கிலேயர்களின் சூழ்ச்சிகளை மெல்ல உணரத் தொடங்கினார் மருதநாயகம்!

இதுவரை ஆற்றல் மிகு தளபதியாய், ஆட்சி நிர்வாகியாய் மட்டுமே இருந்த கான்சாஹிபுக்கு ஏன் நமது நாட்டை நாமே ஆளக் கூடாது-? எதற்கு பிரெஞ்சுக்காரர்களிடமும், ஆங்கிலேயர்களிடமும் அடிமைப்பட்டு கிடக்க வேண்டும்-? இவர்கள் யார்-? அன்னியர்கள்தானே? இந்திய மன்னர்களுக்குள் நடைபெறும் சண்டை, சச்சரவுகளில் அன்னியர்கள் ஏன் லாபமடைய வேண்டும்? இப்படி பல கேள்விகள் அவரிடம் எழுந்தது. அதுவே தேசப் பற்றையும், விடுதலை

உணர்வையும் தூண்டியது!

இங்கிலாந்து & பிரான்ஸ் வரலாற்றை மாற்றிய மருதநாயகம்

இந்தியாவுக்கு முதலில் படையெடுத்து வந்தது ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த போர்ச் சுக்கீசியர்கள் தான். அவர்கள் கேரளாவின் கோழிக்கோட்டுக்கு வந்தார்கள். பின்னர் கோவாவை மட்டும் முழுமையாக ஆண்டார்கள்.

டேனிஷ்காரர்கள் இன்றைய நாகை மாவட்டம் தரங்கம்பாடியை மட்டும் ஆண்டார்கள். டச்சுக்காரர்கள் இன்றைய நாகப்பட்டினத்தையும், தூத்துக்குடியையும் கைப்பற்றினார்கள். நன்றாக ஆய்வு செய்தால் துறைமுக நகரங்களை மட்டுமே இவர்கள் விரும்பியிருக்கிறார்கள். வணிகம் தான் இவர்களது பிரதான ஆசையாக இருந்திருக்கிறது. ஆட்சி அல்ல எனலாம். ஆனால் இங்கிலாந்து நாட்டவரான ஆங்கிலேயர்களும், பிரான்ஸ் நாட்டவரான பிரெஞ்சுக்காரர்களும்தான் தொழில் மற்றும் வணிகத்தைத் தாண்டி ஆட்சியைப் பிடிக்கும் நோக்கத்தில் தீவிரம் காட்டினார்கள்.

அதனாலேயே தமிழ் மண்ணில் அவர்களுக்குள் பல போர்கள் நடந்தன. அல்லது சண்டையிடும் இரு இந்திய அரசர்களுக்கு ஒருவருக்கொருவர் எதிர் அணியில் நின்று ஆதரவளித்தனர். இறுதியில் ஆங்கிலேயரே வென்றாலும், அதற்குக் காரணம் மருதநாயகம்தான். மருதநாயகம் பிரெஞ்சுப் படையிலேயே நீடித்திருந்தால் ஆங்கிலேயர்கள் பல போர்களில் தோல்வியடைந்திருப்பார்கள்.

மருதநாயகம் பிரெஞ்சுக்காரர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஆங்கிலேயர்களுடன் இணைந்ததால்தான், பல இடங்களில் மருதநாயகமே பிரெஞ்சுப் படைகளை தோல்வியடையச் செய்தார். அதனாலேயே பாண்டிச்சேரி மற்றும் காரைக்காலோடு பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சி சுருண்டது.

மருதநாயகம் அணி மாறாமல் இருந்திருந்தால் தமிழ் மண்ணில் பெரும் பகுதி பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கும். இந்தியாவின் ஒரு பெரும் பகுதியை ஆண்ட பெருமை அவர்களுக்கும் கிடைத்திருக்கும். தமிழகத்தில் விடுதலைப் போராட்டம் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இல்லாமல், பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக மாறிப் போயிருக்கும்.

வரலாறு மாறியதற்குக் காரணம், மருதநாயகம் அணிமாறியதுதான் என்பது ஒரு வியப்பான செய்தியாகும்.

**அன்றைய ஐரோப்பிய அரசியல்**

மருதநாயகத்தின் வரலாறை பார்ப்பதற்கு முன்பு அன்றைய சர்வதேச அரசியலையும், அதன் இந்திய விளைவுகளையும் அறிந்து கொள்வது நல்லது.

ஐரோப்பாவிலிருந்து வருகை தந்த வெவ்வேறு நாட்டவர்களான ஆங்கிலேயர்கள், போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்களுக்கு மத்தியில் இந்தியாவில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்று ஏகாதிபத்திய போட்டி நடைபெற்றது.

இன்று வெளிநாட்டு கம்பெனிகள் சந்தை பொருளாதாரம், உலக மயமாக்கல் போன்ற குறுக்கு வழிகளில் இந்திய பொருளாதாரத்தையும், மறைமுகமாக இந்திய அரசியலையும் தங்கள் விருப்பங்களுக்கு வளைப்பது போலத்தான் அன்றைய அரசியல் நிலையும் இருந்தது.

18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தொழில் புரட்சி ஏற்பட்டு, நவீன இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதன் காரணமாக அனைத்துப் பொருள்களும் வேகமாகவும், தரமாகவும் உற்பத்தி செய்யப்பட்டன. பல ஐரோப்பிய நாடுகள் போட்டிப் போட்டு முன்னேறின.

அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்கு உலகம் முழுக்க ஏற்றுமதி வியாபாரத்தை பெருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இன்று இந்தியாவை உலக நாடுகள் மிகப் பெரிய வியாபார சந்தையாக பார்ப்பது போல் அன்றும் பார்த்தன. அதன் விளைவு வியாபாரக் கம்பெனிகள் என்ற போர்வையில், இந்தியாவில் தங்கள் கவனத்தை தீட்டின.

ஔரங்கசீப் 1707ல் இறந்த பிறகு முகலாயப் பேரரசு பலம் குன்றியதும், குறிப்பாக தென்னிந்தியாவின் ஒன்றுபட்ட ஆட்சி இல்லாமல், குறுநில மன்னர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டதும், ஒரே ஆட்சியில் கூட வாரிசுரிமை சண்டைகள் நடந்ததும், அவர்களுக்கு வசதியாய் போயிற்று.

– தொடரும்



லா லா லேண்ட்

அமெரிக்காவில் நாட்டின் காலிஃபோர்னியா மாகாணத்தில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அமைந்துள்ள டோல்பி திரையரங்கில் 89-வது ஆஸ்கர் விருதுகள் விழா இந்திய நேரப்படி சுமார் காலை 7 மணிக்கு தொடங்கியது. இந்நிகழ்ச்சியின் தொகுப்பாளர் ஜிம்மி கிம்மெல் இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். ஹாலிவுட் நடிகர்கள் உள்பட உலகில் உள்ள பல்வேறு திரையுலக பிரபலங்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளனர்.

இந்த விருதகளுக்கான ஆஸ்கர் விருதுகளுக்கான போட்டியில் மூன்லைட், லா லா லேண்டு, ஹேக்சா ட்ஜ், லயன் போன்ற திரைப்படங்கள் பல பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது யார்? யார்? எந்த எந்த பிரிவுகளில் விருது வாங்கியுள்ளார்கள் என்று பார்க்கலாம்.

**சிறந்த நடிகர் :** மான்செஸ்டர் பை தி ஸீ திரைப்பாடத்திற்காக கேஸி ஆஃப்லெக்கு கிடைத்துள்ளது.

**சிறந்த துணை நடிகருக்கான விருது -** மூன்லைட் திரைப்படத்திற்காக அமெரிக்காவை சேர்ந்த 43 வயதான மஹெர்ஷலா அலிக்கு கிடைத்துள்ளது.

**சிறந்த நடிகைக்கான விருது -** லா லா லேண்ட் திரைப்படத்திற்காக எமா ஸ்டோன்க்கு கிடைத்துள்ளது.

**சிறந்த துணை நடிகைக்கான விருது -** பென்சஸ் திரைப்படத்திற்காக வயோலா டேவிஸ் க்கு கிடைத்துள்ளது.

**சிறந்த இயக்குநருக்கான விருது -** லா லா லேண்ட் திரைப்படத்திற்காக டேமியன் சால்லேக்கு கிடைத்துள்ளது.

**சிறந்த திரைக்கதைக்கான விருது -** மான்செஸ்டர் பை தி ஸீ திரைப்படத்திற்காக கென்னத் லோனர்கேன்க்கு கிடைத்துள்ளது.

**சிறந்த குறும்படத்திற்கான** (அனிமேஷன் பிரிவு) விருது - ஃபைபர் திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது.

**சிறந்த ஒலிக்கலவைக்கான விருது -** ஹாக்ஷா ரிட்ஜ் திரைப்படத்திற்காக கெவின் ஓ கானெல் மற்றும் ஆண்டி ரைட் க்கு திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது.

**சிறந்த ஒலித்தொகுப்புக்கான விருது -** அரைவல் திரைப்படத்திற்காக சில்வியன் பெல்மேர்க்கு கிடைத்துள்ளது.

**சிறந்த குறும்படம் (லைவ் ஆக்ஷன் பிரிவு) விருது -** சிங் என்ற குறும்படத்திற்கு கிடைத்துள்ளது.




ஹாக்ஷா ரிட்ஸ்

## மக்கள் திரை

**சிறந்த எடிட்டிங்கான விருது** - ஹாக்ஷா ரிட்ஜ் திரைப்படத்திற்காக ஜான் கில்பர்ட்க்கு கிடைத்துள்ளது.

**சிறந்த பாடலுக்கான விருது** - லா லா லேண்ட் திரைப்படத்தில் இடம்பெற்ற சிட்டி ஆஃப் ஸ்டார் என்ற பாடலுக்கு கிடைத்துள்ளது.

**சிறந்த இசைக்கான விருது** - லா லா லேண்ட் திரைப்படத்திற்க்கு இசையமைத்த ஜஸ்டின் ஹர்விட்ஸ்க்கு கிடைத்துள்ளது.

**சிறந்த விஷூவல் எபெக்ட்ஸ்க்கான விருது** - தி ஜங்கிள் புக் திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது.

**சிறந்த தயாரிப்பு வடிவமைப்புக்கான விருது** - லா லா லேண்ட் திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது.

**சிறந்த ஒப்பனை கலைஞருக்கான விருது** - சூசைட் ஸ்குவாட் திரைப்படத் திற்காக அலிசாண்ட்ரோ, ஜியார்ஜியா, கிறிஸ்டோபர் வில்சன் ஆகியோருக்கு கிடைத்துள்ளது

**சிறந்த ஆடை வடிவமைப்பாள ருக்கான விருது**- ஃபென்டாஸ்டிக் பீஸ்ட் அண்ட் வேர் டு பைன்ட் தெம் திரைப்படத்திற்காக கொலின் அட்வுட்க்கு கிடைத்துள்ளது.







**சிறந்த ஆவணப்படத்திற்கான விருது** - ஓ.ஜெ. மேட் இன் அமெரிக்கா ஆவணபடத்திற்கு கிடைத்துள்ளது.

**சிறந்த அனிமேஷன் திரைப்படம் விருது** - ஜூடோபியா அனிமேஷன் படம் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளது

**சிறந்த அயல்நாட்டு மொழி திரைப்படம் விருது** - தி சேல்ஸ்மேன் என்னும் ஈரான் திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது.

**சிறந்த தழுவல் திரைக்கதைக்கான விருது** - மூன்லைட் திரைப்படத்திற்கும், திரைக்கதை: பாரி ஜென்கிங்ஸ் மற்றும் கதை - டாரெல் ஆல்வின் மெக்கிரானி ஆகியோருக்கு கிடைத்துள்ளது.

**சிறந்த திரைக்கதைக்கான விருது** - மான்செஸ்டர் பை தி ஸீ திரைப்படத் திற்காக கென்னத் லோனர்கன்க்கு கிடைத்துள்ளது.

**கவுரவ ஆஸ்கர் விருது** - உலக சூப்பர் ஸ்டார் ஜாக்கிசானுக்கு கிடைத்துள்ளது.

**சிறந்த திரைப்படத்திற்கான விருது** - மூன் லைட் திரைப்படத்திற்க்கு கிடைத்துள்ளது.

– சந்தோஷ்சிவன்

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள்



தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் 2-வது மாநில மாநாட்டில் மாநில பொதுச் செயலாளர் ஆ. மஹரியன் அவர்களுக்கு மாநில கௌரவத் தலைவர் சித்ரா லட்சுமணன் அவர்கள் பொன்னாடை அணிவித்தார். உடன் மாநில தலைவர் காசி. அரங்கநாதன், மாநில துணை தலைவர் காக்களூர் த. துரைபாபு, மாநில அவைத்தலைவர் ஆ.தே.முருகையன்




தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் 2-வது மாநில மாநாட்டில் மாநில பொருளாளர் அ. காதர் மொய்தீன் அவர்களுக்கு சேலம் மாவட்ட தலைவர் எஸ். ராம்குமார் அவர்கள் நினைவு பரிசு வழங்கினார். உடன் மாநில தலைவர் காசி. அரங்கநாதன், மாநில துணை தலைவர் காக்களூர் த. துரைபாபு, மாநில அவைத்தலைவர் ஆ.தே.முருகையன்

# சங்கத்தின் 2-வது மாநில மாநாடு








தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் 2-வது மாநில மாநாட்டில் வடசென்னை மாவட்ட தலைவர் ஆர்.ஆர். சண்முகவேல் அவர்களுக்கும், வடசென்னை மாவட்ட செயலாளர் கே. ரமேஷ்குமார் அவர்களுக்கும் சேலம் மாவட்ட தலைவர் எஸ். ராம்குமார் அவர்கள் நினைவு பரிசு வழங்கினார். உடன் மாநில தலைவர் காசி. அரங்கநாதன், மாநில துணை தலைவர் காக்களூர் த. துரைபாபு, மாநில அவைத்தலைவர் ஆ.தே.முருகையன்

# சிந்தனை முத்துக்கள்..!



## அழுகை

நான் மழையில்
நனைவதை விரும்புகிறேன்.
நான் அழுவதை யாரும்
பார்த்திடக்கூடாது.
- சார்லி சாப்ளின்

## எறும்பு தத்துவம்

ஓர் எறும்புக்கு முன்னால்
எந்த தடைகளை நீங்கள்
வைத்தாலும் அது அடியில்
சென்றோ அல்லது மேலே
சென்றோ அல்லது சுற்றிச்
சென்றோ தடைகளை கடக்கும்
தடைகளை உடைப்பதற்கு
எறும்புகள் காலத்தை விரயம்
செய்து அழியவில்லை
தடைகளை அங்கேயே விட்டு
அவை முன்னேறுகின்றன.
எல்லாக் கஷ்டங்களிலும்
எறும்புத் தன்னால் முடிந்த
எல்லாவற்றையுமே செய்து
பார்க்கிறது வெல்பவர்கள்
தளர்வதில்லை
தளர்பவர்கள் வெல்வதில்லை
என்ற கொள்கைக்கு
ஆதாரமாக இருக்கிறது. ●

## இது அவசியம்

அதிகாலை எழு
ஆகாயம் தொடு
இருதயம் துடிக்விடு
ஈரமுந்த பல்தேய்
உடல் வேர்வை கழி
ஊலைச் சதை ஒழி
எருதுபோல் உழை
ஏழைப் போல் உண்
ஐம்புலன் பேணு
ஒழித்துவிடு
புகை & மதுவை
ஓட்டம்போல் நட
ஔதடம் பசி
அஃதாற்றின்
எஃ:காவாய் ●

## பொறுப்பின்மை

இவ்வளவு களேபரம்
நடக்கும்போதும்
நடுநிலை தவறாதது
இரண்டே டிவிதான்
ஏஞ்சல் டிவியும்
ஆசிர்வாதம் டிவியும்
அவனுக பாட்டுக்கு
அமைதியா ஆவியோட
மட்டுமே பேசறானுங்க ●

## ....... காகித கலவரம் .......

உயிரோட இருந்தா பிறப்பு சான்றிதழ்
செத்துப் போயிட்டா இறப்பு சான்றிதழ்
நடுவுல எதுக்கு சாதிச் சான்றிதழ் ●

## அரசியல் பாதை ...

நம்பிக்கையில்லாத
தீர்மானத்தை சட்ட
மன்றத்தில்
நடத்தினதுக்குபதில்
மக்கள் மன்றத்தில்
நடத்தியிருந்தா
உண்மையான
தீர்வு கிடைச்சிருக்கும் ●



## அடையாளத்தின் அவனமானம்

கும்பகோணம் அருகில் உள்ள உடையலூரில்
கேட்பாறின்றி கிடக்கும் இதுதான் உலகம் வியக்கும்
தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய ராஜராஜன் சமாதி ●

## தங்கர் குரல்

வாக்குரிமையின் வலிமையை
புரிந்துகொள்ளத மக்கள் இருக்கும் வரை
மக்களாட்சி என்பது திருடர்கள் கையில்
கொடுக்கப்பட்ட சாவிதான் ●



## நியாயம்

ஒழுங்காகச் சம்பாதித்து
பணக்காரன் ஆனவனும்
குறைவு உண்மையை பேசி
பதவிக்கு வந்தவனும்
குறைவு? ●

## ... தெரசாயுதம் ...

கருவுற்று இருந்தால்
ஒரு குழந்தைக்கு
தாயாகலாம்
அதுவே
கருணை இருந்தால்
உலகத்திற்கே
தாயாகலாம் ●

## பெரியார் பஞ்ச்

தேர்ந்தெடுக்கப்பட்ட
அரசியல்வாதிகள்
அயோக்கியன் என்றால்
தேர்ந்தெடுத்தவன்
முட்டாள் ●

## செம டச்?

குடித்துவிட்டு வாகனம்
ஓட்டுவது மனித
வெடிகுண்டுக்குச் சமம்.
- நீதிபதி.

அப்போ அதை விற்கும்
அரசாங்கம்
தீவிரவாதிக்கு சமமா?
- பொதுஜனம் ●

## சபாஷ் நாயுடு

நாயுடுகாரு பத்தே
மாதங்களில் இரண்டு
ஆறுகளை இணைத்துள்ளார்
4600 ஏரிகளை சீரமைக்க
நிதி ஒதுக்கி உள்ளார். ஆனால்
இங்கே, ஒரு ஏரியும் காணோம்
ஆத்தையும் காணோம் ●

## வடிவேல் பஞ்ச்

## இந்தியாவில் அதிகரிக்கும் மனநலக் கோளாறு

10 செகண்ட்டுக்கு
ஒரு பிரேக்கிங் நியூஸ்
போட்டா எப்படி
நல்ல மன நிலையோடு
இருக்கிறதாம்? ●

## யாரோ சொன்னாங்க..!

காட்டை அழித்தவன்
ஆன்மிகவாதி
காட்டைக்காத்தவன்
தீவிரவாதி.

## நோ கமெண்ட்ஸ்



சி.எம். கார்



அமைச்சர் கார்



எல்.எம்.ஏ. கார்



வாக்காளர்கள்


# ஆக்கிரமிப்பில் ஈஷா யோகா

பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவுடன் கார்ப்பரேட் கும்பல்களால் இயக்கப்படுகிற கள்ளச் சாமியார் ஜக்கி வாசு தேவின் ஈஷா யோகா மையம் 109 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்துள்ளது என்ற உண்மையை, வேறு வழியின்றி தமிழக அரசு பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறது.

இதன் மூலம் இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பு நிலத்தில் செயல்பட்டு வரும் ஈஷா மையத்தின் மிக பிரம்மாண்டமான விழாவில் பங்கேற்று சட்டவிரோத ஆதிசிவன் சிலையை திறந்து வைத்த பிரதமர் மோடியும், அவருடன் விழாவில் பங்கேற்ற தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை தமிழக அரசே தன்னையும் அறியாமல் நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஈஷா யோகா மையத்தால் 109 ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்த பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த மனுவே ஈஷா மையம் சட்ட விரோதமானது என்பதை அம்பலப்படுத்தும் விதத்தில் அமைந் துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடதுசாரி அமைப்புகளும், பல்வேறு மக்கள் அமைப்புகளும் இடைவிடாமல் அம்பலப்படுத்தி வந்தன. ஈஷாவுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தி வந்தன என்பதும் கவனிக்கத்தக்கது.

கோவை மாவட்டம் வெள்ளியங்கிரி மலையில் ஈஷா யோகா மையம் சட்ட விரோதமாகக் கட்டியுள்ள



# துணைபோன தமிழகம்..!

கட்டுமானங் களை இடிக்கக் கோரி மலை வாழ் பழங் குடியினர் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் முத்தம்மாள் தொடுத்த வழக்கில் மாநில அரசும், ஈஷா யோகா மையமும் பதில் அளிக்க உயர்நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது.

இந்நிலையில் புதனன்று தமிழக அரசின் நகர்ப்புற திட்டமிடல் துறை துணை இயக்குநர் (பொறுப்பு) ஆர்.செல்வராஜ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில் கூறியிருப்பதாவது:

ஈஷா மையம் சார்பில் சிவன் சிலை அமைப்பதற்காகவும், மூன்று மண்டபங்கள் கட்டுவதற்காகவும் ஒரு லட்சம் சதுர அடி அளவிற்கு நிலங்கள் ஆக்கிர மிக்கப்பட்டுள் ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அக்டோபர் 8, 2016 மற்றும் பிப்ரவரி 15, 2017 ஆகிய தேதிகளில் 19 ஹெக்டேர் தரிசு நிலங்களை மாற்ற கோவை மாவட்ட ஆட்சியர் ஈஷாயோகா மையத்திற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த அனுமதியானது மத வழிபாடு மற்றும் மேம்பாட்டை கருத்தில் கொண்டு தான் வழங்கப்பட்டுள்ளது. இக்கரை போளு வம்பட்டியில் கட்டப்படும் கட்டுமானங் களுக்கு அனுமதி கோரி ஈஷா சார்பில் விண்ணப் பிக்கப்பட்டது. அவற்றை பரிசீலித்த மாவட்ட ஆட்சியரும், தீயணைப் பு துறையும் அனுமதி அளித்தனர். மேலும் மலைப்பகுதி பாதுகாப்புக் குழு, வனத் துறை, வேளாண்துறை, மண்ணியல் மற்றும் சுரங்கத் துறை ஆகியவற்றிடமும் அனுமதி வாங்க வேண்டும் என்றும் ஈஷா மையத் திற்கு அறிவுறுத்தப்பட்டது.

ஈஷா மையத்திடம் உள்ள நான்கு நிலப் பட்டாக்களில் விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் தொடர்பான பணி நிறுத்த உத்தரவும், மூடி சீல் வைப்பதற்கான உத்தரவும் 2012 ஆம் ஆண்டு பிறப்பிக்கப் பட்டுள்ளன. அரசின் உரிய அங்கீகாரம் இல்லாமல் ஈஷாமையம் சார்பில் பல கட்டடங்கள் கட்டப் பட்டு வருகின்றன. இதுதொடர்பாக 2012ல் அனுப்பப்பட்ட நோட்டீஸை எதிர்த்து ஈஷா மேல் முறையீடு செய்துள்ளது.

ஈஷா மையத்தில் 109 ஏக்கர் நிலத் தில் அங்கீகாரம் இல்லாத கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை அனைத் தும் ஈஷா தியான லிங்க மத வழிபாடு என்ற பெயரில் கட்டப் பட்டு வருகின்றன.

இதுதவிர சிவன் சிலை அமைக்கப்பட்ட தற்கான நோக்கம் தொடர்பாக அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்ய ஈஷா மையத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அங்கீகாரமற்ற இடங்களில் கட்டப்படும் கட்டுமானங்கள் தொடர்பாக உரிய கட்ட ணத்தை வசூலிக்க வேண்டு மென 2007ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த கட்ட ணத்தை அப்பகுதியில் உள்ள பஞ்சாயத்து அதிகாரிகள் வசூலிக்காததால் அரசுக்கு வருவாய் இழப்புஏற்பட்டுள்ளது. இவ்வாறு அந்த பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கு மார்ச் 3ஆம் தேதி தலைமை நீதிபதி அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

ஆனால், இக்கிராமத்தில் சுமார் 3 ஏக்கர் பரப்பில் ஈஷா யோகா மையம் சார்பில் 112 அடி உயர சிவன் சிலையும், அதைச் சுற்றி சுமார் ஒரு லட்சம் சதுர அடியில் தியான மண்டபங்கள், கார் பார்க்கிங், பூங்கா போன்ற கட்டுமானங்கள் சட்டத்துக்கு புறம்பாக மலைப்பகுதியில் கட்டப்பட்டுள்ளன.

இதனிடையே கோவையில் உள்ள ஈஷா யோகா மையம் விதிகளை மீறி 109 ஏக்கரில் கட்டிடங்களை கட்டியுள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு கூறியுள்ளது. ஆதியோகி சிவன் அமைத் தற்கான ஆவணங்களை கேட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

சமீபத்தில் இந்த வழக்கு ஐகோர்ட் டில் விசாரணைக்கு வந்தது. அப்போது, விதிமுறை மீறி கட்டப்பட்டப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக பதில் அளிக்க ஈஷா யோகா மையத்திற்கு ஐகோர்ட் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. – ராம்குமார்

மெரினா போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் நடந்த வன்முறைகளில் போலீஸாரும் பங்கெடுத்த காட்சிகளை வாட்ஸ்அப்பிலும், தொலைக்காட்சி சேனல் களிலும் பார்த்த பலர் அதிர்ந்துபோனார்கள்.

இப்படியெல்லாம் நடக்கும் என்று அவர்களால் நம்ப முடியவில்லை. ஆனால், காலங்காலமாகப் போராடிக் கொண்டிருக்கும் இடதுசாரிகள், தொழிற்சங்க இயக்க அனுபவம் உள்ளவர்கள், ஜனநாயக இயக்கங்கள் சார்பில் வீதியில் இறங்கியவர்களுக்கு இது புதிதாகவே இருந்திருக்காது.

காவல் துறையின் வன்முறையை நான் நேரடியாகப் பார்த்தது 1991-ல். இராக்குக்கு எதிரான வளைகுடாப் போர் தொடுக்கப்பட் டதைக் கண்டித்து, சென்னை மாநகர அனைத் துத் தொழிற்சங்க ஐக்கிய மேடையின் சார்பில் கண்டனப் பேரணி, ஜெமினி மேம்பாலம் அருகே உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாகப் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவெடுக் கப்பட்டது. முறைப்படி காவல் துறை முன் அனுமதி பெற்று, அண்ணாசாலை கலைக் கல்லூரி அருகிலிருந்து ஊர்வலம் புறப்பட இருந்தது.

அப்போது, எந்த முன்னறிவிப்பும் இன்றி, அமைப்பாளர்களை அழைத்துக் கூடப் பேசாமல், என்ன ஏதென்று சொல்லாமல், அனைவரையும் திடீரென்று கலைந்துபோகு மாறு காவல் துறை கட்டளையிட்டது. ஏனென்று கேட்கப் போனவர்களை நோக்கி காவல் துறையின் லத்திகள் உயர்ந்தன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கையிலிருந்த கொடிகள், கம்புகள், தட்டிகள், பதாகைகள் பிடுங்கப்பட்டன. தொடர்ந்து தடியடி, கண்ணீர்ப் புகைகுண்டு வீச்சு!

அப்போதுதான் பார்த்தேன். ஸ்பென்சர் கட்டிடத்துக்கு எதிராக, ஒரு சிறிய கட்டிட முகப்பில், ஒரு சிறிய இடைவெளிக்குள் ஐம்பது பேரோடு கலந்து நின்று கொண்டிருக்கையில், ஆள் அரவமற்றுப் போயிருந்த அந்த நெடுஞ் சாலையில் எங்களுக்கு மிக அருகே நேர் எதிரே, தட்டிகளைச் சுமந்துவந்திருந்த ஒரு புத்தம் புதிய சைக்கிள் ரிக்ஷாவைக் காவல் துறையினர் அடித்துத் துவம்சம் செய்தனர்.

எங்கள் கண்ணெதிரே அது திடீரென்று தீப்பற்றி எரியத் தொடங்கியது. கேட்பாரின்றிக் கிடந்த ஒரு மோட்டார் சைக்கிளை இழுத்து வந்து, அதையும் தங்களது சட்ட - ஒழுங்குப் பாதுகாப்பு சத்திய வேள்வியில் போட்டு போலீஸ் காரர்கள் எரித்ததைப் பார்த்து அதிர்ந்து போனதை வாழ்நாள் முழுக்க மறக்க முடியாது.

இன்றுபோல் அப்போதெல்லாம் தொலைக் காட்சி சேனல்கள் இல்லை. புகைப்படக்காரர்கள் எப்போதோ விரட்டி அடிக்கப்பட்டிருந்தனர். எந்த சாட்சியப் பதிவுகளுக்குள்ளும் சிக்கிக் கொண்டுவிடாதபடிக்கு, ஏன் இந்த வேலை யைச் செய்தனர் என்ற கேள்விக்கு மறுநாள் காலைதான் விடை கிடைத்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் படு பயங்கரமான ஆயுதங்கள், அமில பல்புகள் போன்ற வற்றை வைத்திருந்த தாகவும், நெடுஞ்



# போராட்டக்காரர்களுக்கு

சாலையில் கொடும்பாவி எரித்ததாகவும், பொது வாகனங்களுக்குச் சேதம் விளைவித்துத் தீ வைத்து எரித்ததாகவும் அவற்றை அடக்கவே காவல் துறையினர் லேசான தடியடிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய சூழலுக்குத் தள்ளப் பட்டனர் என்றும் நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அமெரிக்கத் தூதரகத்தின் நிர்ப்பந்தத்தினால் தான் அந்தத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டிருக்க முடியும் என்று பின்னாட்களில் புரியவந்தது. அப்போது ஆட்சியில் இருந்தது திமுக அரசு. நகைமுரண் என்னவெனில், அடுத்த சில நாட்களிலேயே சந்திரசேகர் தலைமையிலான மத்திய அரசு, 356-வது சட்டப் பிரிவைப் பயன்படுத்தி திமுக ஆட்சியைக் கலைத்துவிட்டது. அதற்கு எதிராகவும் இதே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீண்டும் வீதியில் இறங்கினர் என்பது வரலாறு!

உலகத் தொழிலாளர் போராட்டங்களுக்கெல்லாம் ஆதிப் போராட்டம் என்று வருணிக்கத்தக்க மே தினப் போராட்ட வரலாறும் இத்தகையதுதான்! எட்டு மணி நேர வேலை என்ற உரிமை முழக்கத்துக்காக 1886 மே முதல் நாள் அன்று அமெரிக்காவின் சிகாகோ மாநகரில் பல்லாயிரம் பேர் திரண்டபோது, தேவையற்ற வன்முறையைக் காவல் துறை உருவாக்கித் தடியடி நடத்தியது.

அதைக் கண்டித்து, மே 3-ல் மீண்டும் ஒரு கண்டன இயக்கத்தைத் தொழிலாளர் நடத்தினர். அதிலும் காவல் துறை முதலாளிவர்க்கத்துக்கு ஆதரவான நிலையெடுத்து, தொழிலாளரைக் கடுமையாகத் தாக்கியது.

எனவே, பன்மடங்கு அதிகமான எண்ணிக்கையில் மே 4-ல், 'ஹே மார்க்கெட்' சதுக்கத்தில் தொழிலாளர் ஆவேசத்துடன் திரண்டபோது, சார்ஜெண்ட் ஒருவர் தாக்கப்பட்டதாக ஜோடனை செய்து, தொழிலாளர் போராட்டத்தில் கண்மூடித் தனமாக வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர் காவல் துறையினர். அப்போது பெருகிய குருதியில் நனைத்தெடுத்த ஆடைகளிலிருந்தே தொழிலாளருக்குச் செங்கொடி உருவானது என்பார்கள்.

முன்பெல்லாம் காவல் துறை அத்து மீறல்களுக்குச் சாட்சியம் இருந்ததில்லை. துரதிர்ஷ்டவசமாக, மிக எளிய மக்களுக்கும் இன்று வசப்பட்டுவிட்ட செல்போன் தொழில் நுட்பம் அவர்களை அநியாயமாகக் காட்டிக் கொடுத்து விடுகிறது!

இதுபோலத்தான் இனி வரும் காலம் நாடு சந்திக்க உள்ள பிரச்சனைகளுக்கு இளைஞர்களின் எழுச்சியை பொறுத்தே மாற்றத்தை தக்க வைத்துக் கொள்ளும்.

- அகிலாண்டேஸ்வரி





# போலீஸ் காட்டும் பீதி?



# ஓ.பி.எஸ். அ.தி.மு.க. வீசும் புதிய குண்டு?

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக பி.எச்.பாண்டியனும், அவரது மகன் மனோஜ் பாண்டியனும் பச்சையாகவே இது திட்டமிட்ட மரணம் என்று கூறி விட்டனர். மறைமுகமாக சசிகலா குடும்பத்தையும் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆனாலும் இதற்கு சசிகலா குடும்பத்திலிருந்து எந்த வலுவான பதிலும் வரவில்லை. விரைவில் பெரிய குண்டை எடுத்து ஓ.பி.எஸ் அணி வீசும் என்ற எதிர்பார்ப்பு வலுத்துள்ளது. ஜெயலலிதாவின் மரணம் வரையிலும் கூடவே இருந்தவர்தான் ஓ.பி.எஸ். சசிகலா கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு வந்த போதும் அவர் கூடவேதான் இருந்தார். முதல்வர் பதவியில் அமரப் போகிறார் சசிகலா என்ற செய்தி வந்த போதும் கூட கூடவேதான் இருந்தார்.



ஆனால் அப்போதெல்லாம் எதுவும் பேசாத ஓ.பி.எஸ். தற்போது அடுத்தடுத்து ஜெயலலிதா மரணம் தொடர்பாக அதிரடி காட்டி வருகிறார்.

தொடர்ந்து ஓ.பி.எஸ் அணி பரபரப்புப் புகார்களைக் கூறி வந்தாலும் கூட சசிகலா தரப்பிலிருந்து யாருமே வாய் திறக்கவில்லை. யாராவது ஒரு அமைச்சரவை விட்டு மட்டுமே பதில் தந்து கொண்டிருக்கிறது சசிகலா தரப்பு.

இந்த நிலையில்தான் பி.எச். பாண்டியன் பரபரப்பு புகார்களுடன் செய்தியாளர்களைச் சந்தித்தார். ஜெயலலிதாவை கீழே தள்ளி விடப்பட்டதால்தான் அவரை மருத்துவ மனைக்குக் கொண்டு வந்தனர் என்று அப்பல்லோ மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் அறிக்கை கூறுவதாக பி.எச். பாண்டியன் கூறியுள்ளார்.

அப்படியானால் ஜெயலலிதாவை தள்ளி விட்டது யார் என்ற கேள்வி எழுகிறது. போயஸ் தோட்டத்தில் அந்த சமயத்தில் உடன் இருந்தவர்கள் யார். ஏதாவது வாக்குவாதம் அல்லது சண்டை நடந்தது., அப்படி என்றால் எதற்காக அது ஏற்பட்டது போன்ற கேள்விகளும் எழுகின்றன. தள்ளி விடப்பட்டார் என்றால் படியில் உருட்டி விடப்பட்டாரா அல்லது மாடியிலிருந்து தள்ளி விட்டார்களா என்ற குழப்பங்களும் உள்ளன. ஆனால் விடைதான்

மேலும் போயஸ் தோட்டத்திலிருந்து ஆம்புலன்ஸ் கேட்டு அப்பல்லோவுக்கு போன் போனதாக பி.எச். பாண்டியன் கூறியுள்ளார். அதை செய்தது ஒரு டிஎஸ்பி என்றும் கூறுகிறார். யார் அந்த டிஎஸ்பி என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதுகுறித்து தமிழக டிஜிபி விசாரித்தாரா என்று தெரியவில்லை. ஜெயலலிதா வீட்டில் பாது காப்புக்கு யார் யார் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் விசாரிக்கப்பட்டார்களா என்பதும் கேள்விக்குறியாகியுள்ளது. இதை விசாரித்திருப்பார்களா என்பதும் கேள்விக்குறியே.

பிஎச்பாண்டியனுக்கு மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த மக்களின் சந்தேகமும் ஏன் சிசிடிவி கேமராக்களை அகற்றினார்கள் என்பதுதான். ஜெயலலிதா மருத்துவமனைக்கு எப்போது வந்தார், எந்த நிலையில் வந்தார், யார் கூட்டி வந்தது என்பது உள்ளிட்ட அடிப்படைக் கேள்விகளுக்கு எளிதாக பதிலளிக்கக் கூடியது இந்த கேமராக்கள்தான். ஆனால் அந்தக் கேமராக்களை தூக்கியதுதான் பெரும் சந்தேகத்தைக் கிளப்புவதாக உள்ளது.

ஒவ்வொரு தகவலாக வெளியிட்டு வருகிறது ஓபிஎஸ் அணி. நேற்று பிஎச்பாண்டியன் பேசுகையில் குற்றவாளிகளை நெருங்கி விட்டதாக கூறினார். அப்படியானால் விரைவில் குற்றவாளி யார் என்பதையும் பிஎச் பாண்டியன் வெளியிடுவாரா என்ற பரபரப்பு கூடியுள்ளது.

ஆயிரக்கணக்கான கேள்விகள் ஜெயலலிதா மரணம் தொடர்பாக சுற்றிக் கொண்டிருக்கிறது. அரசியல் தலைவர் என்பதைத் தாண்டி, ஒரு மாநிலத்தின் முதல்வராக இருந்தவர் ஜஸ்ட் லைக் தட் செத்துப் போயிருக்கிறார் என்பது நிச்சயம் ஜீரணிக்க முடியாதது.

**கண்டிப்பாக ஜெயலலிதாவுடன் இருந்தவர்கள் விளக்கம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.. நீதிமன்றம் உத்தரவிடாவிட்டாலும் கூட!**

– குருதேவ்


வாழ்க தமிழ்! வளர்க அன்பு!!

மக்கள் விசாரணை

Applied in NEWS PAPER ASSOCIATION OF INDIA

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-5 மார்ச்-2017 இதழ் - 10

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக வெளியிடுபவர் ஆசிரியர்

A. மவுரியன், B.A.,Dip. Journlism.

• ஆசிரியர் குழு

A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன், காசி. அரங்கநாதன்

• உதவி ஆசிரியர்

காக்களூர் த. துரைபாபு

• துணை ஆசிரியர்கள்

ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், M. தரணி. எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி, V. அருணாச்சலம், வீ. வடிவேல், வீரஆறுமுகம், A. பாலசந்தர், எஸ். கோபி, சத்தியராஜ்

• முதன்மை செய்தியாளர்கள்

சமயசெல்வம், ராம்குமார், பிரகாஷ், பிரதீப், பாலகிருஷ்ணன், செந்தில்குமார், மனோஜ்குமார், R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா, பி.கே.தனஞ்செயன், அ.மு.ராமனாத்திரி, மார்கபந்து, சசிக்குமார், குமரேசன், யு. அக்ரம்கான், சுக்கூர்கான், பா. சுப்பிரமணியன், நாகராஜ், மாரிமுத்து, சுசீ சுல்வர், ராமசுப்பிரமணியன், சிலம்பரசன், செந்தில், சத்தியராஜ்,

• நிருபர்கள்

எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, ராஜேஷ் அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்

• சட்ட ஆலோசகர்கள்

M. குணசீலன், B.Com.,M.L., M. சுதாகர், B.Sc.,B.L., (உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர் : எம். சந்தோஷ்சிவன்

• இதழ் வடிவமைப்பு : AKS CREATIVE'S

அலுவலகம் :

மக்கள் விசாரணை

நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி, ஜார்ஜ் டவுன், சென்னை – 600 001.

Email : writermouriyan@gmail.com www. makkalvisaranai.com

Information Contact : feedback@makkalvisaranai.com

Phone : 044 - 4354 2611, 93821 33334

Press & Registration of Book Act-in படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாளர். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

இதழ் ஆண்டு சந்தா ரூ. 110 /-

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. போன் : Email : writermouriyan@gmail.com
போன் : 044 - 4354 2611, செல் : 9382133334

# பெண் போலீசுடன் கள்ள காதல்...

திருவள்ளூரில் பெண் காவலருடன் தகாத தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ள சக போலீஸ்காரரை தட்டிக் கேட்ட மற்றொரு போலீஸ்காரர் குத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூரில் ஆயுதப்படை காவலராக பணியாற்றி வருபவர் சரண்யா. இவருக்கும் மற்றொரு போலீஸான கல்யாணைக்கும் கள்ளத் தொடர்பு இருந்து வந்தது.

அதே நேரத்தில் கல்யாணைக்கு தெரியாமல் சரண்யாவுக்கு, சென்னை ஆயுதப்படையில் பணியாற்றும் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் பகுதியைச் சேர்ந்த அமிர்தராஜ் என்பவருடனும் பழக்கம் இருந்து வந்துள்ளது. இது தெரிய வந்தபோது அமிர்தராஜூடன் கல்யாணை மோதியுள்ளார்.

இதனால் அமிர்தராஜுக்கும், கல்யாணைக்கும் முன்விரோதமானது. இந்த நிலையில் நேற்று இரவு சுமார் 11 மணி அளவில் கல்யாணை தமது சக போலீஸ்காரர்களான சுந்தரபாண்டியன், சந்திரன் ஆகியோருடன் மது அருந்தியுள்ளார்.

அப்போது சரண்யா விவகாரத்தை கல்யாணை நண்பர்களிடம் விவரித்திருக்கிறார். தம்மை அமிர்தராஜ் மிரட்டியதாகவும், கடுமையான வார்த்தைகளால் திட்டியதாகவும், தற்போது சரண்யா வீட்டில் உள்ள அமிர்தராஜை ஒரு கை பார்க்க வேண்டும் என்றும் கல்யாணை தெரிவித்தாராம்.

மதுபோதையில் இருந்த 3 பேரும், சரண்யா வீட்டிற்கு சென்று, வீட்டில் இருந்த அமிர்தராஜை வெளியே வருமாறும், தகராறில் ஈடுபட்டனர். அப்போது சுந்தரபாண்டியனுக்கும், அமிர்தராஜுக்கும் இடையே வாய்த் தகராறு ஏற்பட்டது.

திடீரென அமிர்தராஜ் மறைத்து வைத்திருந்த கத்தியால் சுந்தரபாண்டியனை குத்தினார். இதில் அலறிய சுந்தரபாண்டியனின் குரலை கேட்டு மற்ற போலீஸ்காரர்கள் குவிந்தனர். ரத்த வெள்ளத்தில் கிடந்த சுந்தரபாண்டியனை திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். அமிர்தராஜை திருவள்ளூர் டவுன் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொலைக்கு காரணமாக இருந்த சரண்யா திருமணமானவர். அவரது கணவர் ராணுவத்தில் பணியாற்றி வருகிறார். கள்ளக்காதல் விவகாரத்தில் போலீஸ்காரர் ஒருவர் சக போலீஸ்காரரால் கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



# தாம்பரத்தில் ஊடுருவிய சமூக விரோதிகள்.!

**தாம்பரத்தைச் சுற்றியுள்ள வனப் பகுதிகளில் சமூக விரோதிகள், வெளிநபர்கள் நடமாட்டத்தை தடுக்க வனத்துறை சார்பில் அகழிகள் வெட்டப்படுகின்றன.**

தாம்பரம், வண்டலூர்,ஸ்ரீ பெரும்புதூர், செங்கல்பட்டு, மாம்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் வனத்துறைக்கு சொந்தமான இடங்கள் உள்ளன. இதில் தைல மரம், வேம்பு உள்ளிட்ட மரங்கள் வளர்க்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. இந்த வனப்பகுதிகளில் மயில், மான், முயல், நரி, முள்ளம்பன்றி உள்ளிட்ட உயிரினங்கள் உள்ளன.

இங்கு ஆள் நடமாட்டம் இல்லை என்பதால், சமூகவிரோதிகள் புகுந்து கைவரிசை காட்டுகின் றனர். கும்பலாக வனப்பகுதிக்குள் சென்று மது அருந்துவது, விலங்குகளை வேட்டையாடுவது, மரங்களை வெட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இது மட்டுமின்றி, சிகரெட்டை ஆங்காங்கே வீசி விட்டுச் செல்வ தால், காய்ந்த இலைகள், சருகுகளில் தீப்பற்றி பெரிய அளவில் சேதத்தை ஏற்படுத்துகிறது. கோடை காலங்களில் இது போன்ற விபத்துகள் அடிக்கடி நடக்கின்றன.

இதை தடுக்கும் வகையில் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வனத்துறை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, வெளிநபர்கள் வனப்பகுதிக்குள் நுழையாமல் தடுக்கும் வகையில், வனத்தின் எல்லையை ஒட்டிய பகுதிகளில் அகழிகள் வெட்டப்படுகின்றன.

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

சமூக விரோதிகளின் நடமாட்டத்தை தடுக்கும் நோக்கில், அனைத்து வன எல்லைப் பகுதிகளிலும் அகழிகள் வெட்டும் பணி நடக்கிறது. வனப்பகுதியில் யாரும் நுழையக் கூடாது என்று சட்டம் இருந்தும், பொதுமக்கள் பின்பற்றுவதில்லை. பல இடங்களில் குறுக்குப் பாதை அமைத்து வனப்பகுதிக்குள் செல்கின் றனர். வனப்பகுதிக்குள் அத்துமீறி நுழைபவர்கள் மீது வனத்துறை சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வனப்பகுதிக்குள் வெளிநபர்களின் வாகனங்கள் அத்துமீறிச் செல்லாமல் இருக்கவும், அவர்களால் தீ விபத்துகள் ஏற்படாமல் இருக்கவும், ஆக்கிரமிப்புகளை தடுக்கும் நோக்கிலும் தாம்பரத்தை சுற்றியுள்ள அனைத்து வனச் சரகப் பகுதிகளிலும் அகழிகள் அமைக்கும் பணி நடந்துவருகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

– சச்சின்



◆ ஆ.மவுரியன்

8

# கருநிற காக்கிகள்

**தமிழரசுவின் அருகில் வந்த அந்த பெண், தனது வசீகரமான காந்தப் பார்வையை தமிழரசு மீதும் வீசினாள்.**

அந்த பெண்ணைப் பார்த்து தமிழரசுக்கு பித்தம் தலைக்கு ஏறியது. மதில் சுவர் மேல் இருந்து கீழே குதித்தான். அவளும் போதை கண்ணால் தமிழரசுவை பார்த்த படியே நடந்து சென்றாள். கொஞ்ச நேரம் கூட பொறுமையாக இருக்க முடியாது என்று அவள் பின்னால் ஓடினான் அவளும் வச்சக்கண் வாங் காமல் பிசிறு தட்டாமல் திரும்பி, திரும்பி பார்த்துக் கொண்டே போனவள் தமிழரசு ஓடிவருவதை பார்த்து எந்த சலனனும் இல்லாமல் பதட்டமும் படாமல் ஓரிடத்தில் நின்றுவிட்டாள். தனது கையில் வைத்திருந்த குடையை மடக்கி ஹேன் பேக்கில் வைத்துக்கொண்டாள். அவள் அருகில் சென்ற தமிழரசு எக்ஸ் க்யூஸ்மி வாட் ஈஸ் யுவர் நேம் ப்ளீஸ் வாட் என்றாள்? சிரித்தபடி, இல்ல நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க, உங்க பேர் என்ன? மை நேம் ஈஸ் அனிதா. வாவ் பெண்டாஸ்டிக், மார்வலஸ் சுவீட் நேம், கொஞ்சம் ஹனிதறீங்களா? ஹனியா? என்ன சொல்றீங்க?

அதான் பேர்லேயே தேன வச்சி றிக்கீங்களே கொஞ்சம் கொடுங் கன்னு கேட்டேன், நீங்களும் சுவிட்டா பேசிறீங்க, உங்க ரேட் என்ன? வாட் நான்சன்ஸ்? ஐ அம் மேரிட்..., நோ.. நோ.. ஒன்லி ஐ ஆம் குட்சென்ஸ், நீங்க பார்வையிலே அதுக்கு கூப்பிட்டிங்க, சிவனேன்னு உட்காந்திருந்த எனக்கு மூட் வரவச் சிட்ட, அதுக்கு காரணம் உனது செக்ஸியான பார்வையும் உன் நடையும்தான், தப்பா பேசிறீங்க, இல்ல நான் சரியாதான் பேசறன். 500–ரா, ஆயிரமா? உங்க ரேட் என்ன? நான் யார் தெரியுமா? என் வீட்டுக்காரர்யார்தெரியுமா? ரோட்ல போறவங்க வரவங்களையெல்லாம் கண்ணாலயே அதுக்கு வரியான்னு கூப்பிடுற?

உன்ன மாதிரி பொம்பளைக்கு எந்த கம்மனாட்டி புருஷனா இருந்தா எனக்கென்ன? உன் வீட்டிலி ருந்து இங்க எத்தன கிலோ மீட்டர் இருக்கும் என்று கேட்டான்? எப்படி யும்ஒருகிலோமீட்டர்இருக்கும்என்று சொன்னாள், உடனே எதற்கு என்று கேட்டாள்? எதுக்கு அசராத என்னை போல இரும்பையே உன் பார்வை டெம்ப்பர் கௌப்புதுன்னா பாவும் வெடலப்பசங்க கதி என்ன ஆயிருக் கும்? எந்த பாத்ரும்ல இருக்காகங் களோ, இல்ல எவ வீட்ல இருக்காங் களோ? என்னென்ன தப்பு நடந்ததோ? எவன் செத்தான்னு தெரியலயே ? அது இருக்கட்டும் ஆனா உன்னப் பார்த்தி லிருந்து எனக்கு இப்ப மூடு அதிகமா யிடுச்சி உன் ரேட்டு எவ்வளவானா லும் பரவாயில்லை, இங்கேயே வச்சிக் கலாமா என்று பேசியபடி அவள் முகத்தில் முத்திமிடச் சென்றான் தமிழரசு.

என் வீட்டுக்காருக்கு இதெல்லாம் தெரிந்தால் உன் உயிரே இருக்காது. பரவாயில்லை உன்னை அடைஞ்ச துக்கு அப்பறம் கழுத இந்த உயிரு இருந்தா என்ன? இல்லாட்டி என்ன?

நீ அக்காத் தங்கச்சியோட பொறக் களையா? இப்படியா ஒரு பொம்ப ளைக்கிட்ட அன்டிசன்டா பிகேவ் பன்னுவ? வெக்கமா இல்ல?

உன் புருஷனுக்குமட்டுமேகாட்ட வேண்டிய இந்த உடம்ப, கட விரிச்சி ஊருக்கே காட்டிக்கிட்டு வறியே?

இதுக்கே உனக்கு வெக்க மில்லாதபோது ஆம்ப ளைங்க எங்களுக்கு வெக்கமாவது, மானமாவது. நான் பெர்த்திலேயே மோசமான பொறம் போக்கு. தவுசன் ஓல்டேஜ் டேஞ்சரஸ் மேன். இவ்வளவு நேரம் நான் யாருக்கிட்டேயும் பேசினது கிடையாது. அதற்குள் அனிதா யாருக் கிட்டேயோ போனில் பேசிக் கொண்டிருந்தாள். தமிழரசு அவளை அடைய நடுரோட்டில் புடவையை உருவி துரத்தினான்.

அந்த நேரம் பார்த்து ரோட்டில் யாரும் இல்லை. தமிழரசுக்கு ரொம்ப வசதியாக இருந் தது. அனிதாவின் இரண்டு கைகளையும் பிடித்து முகத்துக்கு நேராக முகம் வைத்து முத்தமிடச் சென்றவன் திடீரென்று கீழே திறந்திருந்த ட்ரைனேஜ் பள்ளத்தில் தள்ளி விட்டான். அது 200 அடி ஆழத்திற்கு இருக்கும். சாக்கடை நீர் நிரம்பி நாத்தம் தாங்காமல் ஓடிக்கொண்டிருந்தது. அந்த ட்ரைனேஜிக்கு அருகில் இருந்த மூடியை எடுத்து மூடினான்.

தமிழரசுவின் அருகே ஒரு கார் வந்து நின்றது. காரிலிருந்து ஒரு முனிசிப் மாஜிஸ்திரேட் நடந்து வந்தார். அவரைப் பார்த்தவுடன் தமிழரசுக்கு கை, கால் ஒன்றும் ஓடவில்லை. சற்று நேரத்தில் கைத் தட்டியபடி அருகில் வந்தான், வயது 45 இருக்கும். ஹலோ மிஸ்டர் அவ என் மனைவிதான் நான் செய்யனும் நினைச்சத நீங்க செய்ஞ்சிட்டிங்க. பெரிய தொல்லையிலிருந்து இன்னிக்குத்தான் விடுதலை கெடைச்சிருக்கு. என் மனைவியைப் பற்றி தினமும் 10, 15 கம்ப்ளைண்டாவது என் கிட்ட வரும்.

என் நிம்மதியை கெடுத்திட்டா, அதுமட்டு மில்லாமல் இந்த ஏரியா நிம்மதியையும் கெடுத்திட்டா நிறையபேர் பேர் என்னை இந்த ஏரியாவை விட்டு காலி பண்ணுன்னு டார்ச்சர் பன்னாங்க, இன்னிக்கு நான் நிம்மதியா தூங்கு வேன். நீங்க யாரு? நீங்க செய்யுறது எல்லாமே எனக்கு நல்லா தெரியும்? இப் யூ டோன் மை, ஐ வில் சப்போர்ட் யூ. டோன் கேர். பிஹேப்பி என்று கை கொடுத்தபடி காரில் ஏறி புறப்பட்டுச் சென்று விட்டார்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த ட்ரைனேஜ் வெடித்து 50 அடி உயரத்திற்கு அந்த மூடி பறந்து கொண்டிருந்தது.

ஸ்பென்சர் பிளாசாவில் ராஜசேகர் நின்று கொண்டிருந்தான். அப்பொழுது கௌரி அவள் தோழியுடன் மூன்றாவது தளத்தில் செல்வதை ராஜசேகர் பார்த்துவிட்டான். வந்த வேலை முடியாமல் போய்விடுமோ என்ற பதற்றத்தில் நகத்தைக் கடித்துக்கொண்டு நின்றிருந்தான். ஒரு வழியாக ஆம்பலால் சேட்டும், திவ்யாவும் ராஜசேகரின் அருகே வந்தார்கள். திவ்யாவின் அழகில் ராஜசேகர் ப்யூஸ் போன பல்ப்பாக ஆகிவிட்டான். சேட் ஏன் இவ்வளவு லேட் என்று ராஜசேகர் கேட்டான்? நம்ம அக்ரிமெண்ட்ல டைம் கீப்பப்தான் ரொம்ப முக்கியம். டீலிங் ஒரு ரூபா, ரெண்டு ரூபா இல்லா, இரண்டாயிரம் கோடி புரியுதா? திவ்யாவைப் பார்த்து உனக்குந் தான் திவ்யா என்றான். ஓகே அண்டர்ஸ்டேண்ட்

இப்ப நான் என்ன செய்யணும் என்று ராஜ சேகரைப் பார்த்து திவ்யா கேட்டாள். முதல்ல அதைத் தெரிஞ்சுக்கோ...

பாயிண்ட் நெ.–1) உன் ப்ரண்ட் கௌரிய ஏதாவது ஒரு காப்பி ஷாப்புக்கு வரச் சொல்லணும். அங்க நீ என்னைப் பத்தின பொய்களை அவுத்துவிடணும். சோ அதாவது பில்டப் பண்ணணும் சொல்றது புரியதா?

எஸ் அண்டர்ஸ்டேண்ட் என்று சிரித்தபடி திவ்யா சொன்னாள். கௌரிக்கு அப்பதான் என் மீதான எரிச்சல் வரும். எரிச்சல் வர்ற மாதிரி உன்னுடைய ஆக்டிவிட்டிஸ் இல்லைன்னா இந்த டீலிங் ஒர்க்கவுட் ஆகாது. ஒன்னும் புரியலயே கொழப்பமா இருக்குது என்று தன்னுடைய சொட்டைத் தலையை ஆம்பலால் சேட் சொறிந்து கொண்டான். ரொம்ப சொறியாத சேட் ரத்தம் வந்து சொட்டையில புண்ணாயிடப் போவுது. இதெல்லாம் இப்ப ஒனக்கு புரியாது. போகப் போக உனக்கு தானா புரியும்.

எங்க அப்பாவுக்கு மட்டுமில்ல எனக்கும் ஒன்னும் புரியல ராஜசேகர்? நான் சொல்றத மட்டும் செய்யிறீங்க,

பாயிண்ட் நெ.–2) நீ கொடுக்கிற என்னப் பத்தின பில்டப்ளதான் அவளுக்கு 100% எரிச்சல் வரும். அந்த எரிச்சல்தான் என் மீதான சிந்தனையை நிரந்தரமாக வச்சிருக்கும். அந்த நிரந்தரமான சிந்தனைதான் ஒரு கட்டத்தில நல்ல அபிப்ராயமாக மாறும். அதுக்கப்பறம் வரும்பாரு ஒரு மாதிரியான ஃபீல் அதுக்கு பேர்தான் காதல். இப்ப நீ செய்ய வேண்டியதெல்லாம் உனக்கும் எனக்கும் இருக்கிற டீலிங் கடைசி வரைக்கும் தெரியக் கூடாது. அது தெரிஞ்சிட்டா நம் எல்லோருடைய உயிருக்கும் அது ஆபத்தாயிடும். என்ன புரியுதா திவ்யா? என்று கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே திவ்யா கௌரிக்கு போன் செய்து கொண்டிருந்தாள். **- தொடரும்**



# ஒரு மெயில் அனுப்பு...

உன்பேச்சில் பொய்கள்
அதிகமாய் இருக்கும்..
என்றாலும் என்னிடம்
சொல்லமாட்டாய்...
இது நம்பிக்கை...

இவன் நம்புவான்,
ஏமாற்றி விடலாம்..
இது துரோகம்

நான் கொண்ட
அன்பிற்கு,
நீ தந்த மகுடம் அது.

ஏற்றுக்கொள்கிறேன்
ஏனென்றால்,...
என்னன்பில்
பொய்யில்லை

என்மீது
ப்ரியம் உள்ளவன்
போல நடித்த...
இதயமில்லாதவனுக்கு
எழுதும் இரங்கற்பா !

என் முதுகெலும்பை
முற்றிலுமாய்
ஒடித்துவிட்டு
நான் சாய்ந்து உட்கார...
சாய்வு நாற்காலி
தருகிறாயே...?

உனக்காக புத்தகத்தின்
அட்டையை மாற்றி...
சட்டையை மாற்றி...
தலைமுடி மாற்றி...
தேகம் மாற்றி...
இப்படி எல்லாம் மாற்றி
கடைசியில் நீயும்
ஏமாற்றி ஏளனப்படுத்தி
என்னை
பைத்தியம் என்றாய்..

எனக்கு
எதையெல்லாமோ
கற்றுக்கொடுத்தாய்!
ஏழையாய் வாழ...
தாடி வளர...
கவிதை எழுத...
அவமானப்பட...

அதற்கு
குருதட்சணையாகத்தான்
என்னை வீதியில் நிற்க
வைத்தாயோ..?

பரிசுத்தமான பேரன்பில்
இருந்த என்னிடம்
உதவி கேட்டு
சத்தியம் தவற மாட்டேன்
என்று சொன்னவனா?
இப்படி நம்பிக்கை
துரோகம் செய்தாய்?

நீ என்றேனும்
இந்த கவிதையை
பார்க்க நேர்ந்தால்...
உன்பெயர்
குறிப்பிடாமல்...
மெயில் அனுப்பு!
எனக்கு துரோகம் செய்த
காரணத்தை...

– கவிஞர் நிவேதிதா

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor A. Mouriyan.

# பலன் பெற்றோர் பாராட்டுகிறார்கள்!



## இடுப்பு வலி

நான் கடந்த 2,3 ஆண்டுகளாக இடுப்பு வலியால் அவதிப்பட்டு வந்தேன். தாங்க முடியாத இடுப்பு வலியால் பாத்ரூமில் கூட உட்கார்ந்து எழ முடியாது. விண், விண் என்று வலி இருக்கும் எங்கும் போகமுடியாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தேன். ஸ்கேன் எடுத்து பார்த்ததில் இடுப்பு எலும்பு தேய்ந்து விட்டது என்று சொன்னார். அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றும் அதற்கு 3 லட்சம் செலவாகும் என்றும் சொன்னார்கள். அதன்பிறகு டி.வி. மற்றும், புத்தகத்தின் மூலம் விளம்பரத்தைப் பார்த்தேன். ரப்பானி வைத்தியசாலாவில் ஒரு ஆண்டாக மருந்து சாப்பிட்டேன். இப்பொழுது அறுவை சிகிச்சை இல்லாமல் 73 வயதிலேயே எனக்கு இடுப்பு வலி குணமாகிவிட்டது. தினமும் அரைமணி நேரம் நடக்கிறேன். இடுப்பு வலி இல்லாமல் நன்றாக இருக்கிறேன்.

**திரு. ராமச்சந்திரன், அம்பத்தூர், சென்னை.**

## இடுப்பு வலி



நான் கடந்த 12 ஆண்டு காலமாக இடுப்புவலி நோயினால் அவதிப்பட்டு வந்தேன். ஆபரேஷன் செய்யச் சொன்னார்கள் செய்தாலும் 50%தான் குறையும் என்று சொன்னார்கள். பிறகு டி.வி.யின் மூலம், புத்தகத்தின் மூலம் விளம்பரத்தைப் பார்த்தேன். நேரில் வந்து ரப்பானி வைத்தியசாலாவில் சிகிச்சைப் பெற்றேன். இப்போது எந்த வேதனையும் இல்லை. நல்லமுறையில் இருக்கிறேன்.

**திருமதி. கே.வி. காந்தி, அம்பத்தூர்**

## பக்கவாதம்



நான் கடந்த 7 ஆண்டுகளாக பக்கவாதத்தால் அவதிப்பட்டு வந்தேன். படுத்த படுக்கையாக இருந்தேன். என்னால் பேசக்கூட முடியாது. மும்பையில் எல்லா பெரிய மருத்துவமனைகளிலும் சிகிக்சை பெற்றும் பயன் இல்லை. பிறகு புத்தகத்தின் மூலம், டி.வி.யின் மூலம் விளம்பரத்தை பார்த்து இங்கு மருத்து சாப்பிட ஆரம்பித்தேன். ஆறு மாதத்திலேயே என்னால் நடக்க முடிகிறது. இப்பொழுது என்னால் பழைய மாதிரி எல்லா வேலைகளையும் செய்ய முடிகிறது. எல்லா இடங்களுக்கும் தனியாக நடந்து செல்கிறேன். பேச்சும் தெளிவாகி வந்து விட்டது. இப்போது எந்த குறையும் இல்லை.

**திரு. கங்காராம் மும்பை -88**

**கை, கால் வாதம், முளை வளர்ச்சிக்குறைவு, மூலம், நரம்புத்தளர்ச்சி, பாலினகுறைபாடு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற யுனானி மருத்துவர்

## டாக்டர் ஹக்கீம் S.A.சையத் சத்தார் ரப்பானி வைத்யசாலா

புது எண்.139, ப.எண். 65, டாக்டர் பெசன்ட்ரோடு, மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை -600 014. போன்: 28476969, 28470874,

பார்க்கும் நேரம்: காலை 9 மணி முதல் 2 வரை. ஞாயிறு விடுமுறை



CAPTAIN TV — திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 முதல் 9.00 வரை

V — வேந்தர் காலை 10.30 முதல் 11.00 வரை

WIN TV — தினமும் மாலை 5.00 மணிக்கு

தமிழன் — திங்கள் முதல் வெள்ளி வரை - காலை 9.30 மணிக்கும், மாலை -6 மணிக்கும், புதன் மற்றும் வியாழன் - இரவு 11.00 மணிக்கு மற்றும் சனி- மாலை 5மணிக்கும்

MEGA TV — திங்கள் முதல் சனி வரை காலை 9.00 முதல் 9.30 வரை

**மாதந்தோறும் டாக்டர் சையத் சத்தாரின் யுனானி மருத்துவமாத இதழ் கடைகளில் கேட்டு வாங்குங்கள்.**

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

UB BUILDERS™
Build Creative...

# UB - AKSHARA

POWERED BY UB BUILDERS

Individual & Duplex House

DTCP APPROVED PLOT

**108 Houses**

**28 Lakhs** Onwards



On Sriperumbudur Main Road,
Thodukadu Near Delphi TVS

UB BUILDERS™

HEAD OFFICE : MIG: 1187, TNHB, KAKKALUR, THIRUVALLUR - 602001
CALL US - 7200052525,9791317404, 044 - 27663231 www.ubbuilders.in, info@ubbuilders.in